விஷ்வவாணி

# சமர்ப்பண்

Vol. 37 - Issue 7 | July 2024 | Rs. 10/-



## சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர் தேவ ஜனம், அறிவிக்கிறவர் தேவ சேனை

விஷ்வவாணி சமர்ப்பண்
July 2024

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஒரியா, சோரா, பெங்காலி, ஆங்கிலம், காக்பொராக், நேபாளி ஆகிய 13 மொழிகளில் பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது. ஆண்டு சந்தா ரூ. 100/–.

**பதிப்பு அலுவலகம்**
1-10-28/247, ஆனந்தபுரம், குஷாய்குடா,
E.C.I.L. P.O, ஹைதராபாத் - 500062
✆040-27125557.
E-mail: samarpan@vishwavani.org

**நிர்வாக அலுவலகம்**
20, ராகுல் தெரு, TMP நகர், புதூர்,
அம்பத்தூர், சென்னை – 600053
✆09443127741
E-mail: vishwavaninet@vishwavani.org

## பருகப்போவது

2......சிந்தனைக்கு
3......நிர்வாக இயக்குநரிடமிருந்து
7......சிறப்புக் கட்டுரை
10 ...ஓர் பிரார்த்தனை
11....திருமறை ஆய்வு
15 ...சின்னச் சின்ன உணர்வுகள்
20 ...அன்பின் பகிர்வுகள்
22 ...ஜெப ஒருங்கிணைப்பு இயக்குநர் கடிதம்
25 ...பணித்தளச் செய்திகள்
34 ...நடப்புச் செய்திகள்



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷம் இந்தியக் கிராமங்களை ஆசீர்வதிப்பதைக் காண்பதே விஷ்வவாணியின் தரிசனம்!

## எமில் அண்ணனின் சிந்தனை வரிகள்

- சுவிசேஷத்தை
  ஏற்றுக்கொண்டால் தேவ ஜனம்,
  அறிவித்தால் தேவ சேனை!
- தேவ ஜனம் என்றால் அன்பு,
  தேவ சேனை என்றால் ஐக்கியம்!
  அன்பிற்கு கல்வாரி,
  ஐக்கியத்திற்கு மேல்வீடு!
- சுவிசேஷத்தை
  ஏற்றுக்கொண்டவராக இருந்தும்
  அறிவிக்கிறவராக இல்லையென்றால்
  பெருக்கி ஜோடிக்கப்பட்ட வீடே,
  ஓர் நாள்
  முன் நிலையிலும் பின்னிலை கேடே!
- ஜனங்கள் பிறப்பார்கள், இறப்பார்கள்,
  தேவ ஜனமோ சாவதே இல்லை,
  சேனைகள் தோன்றும், மறையும்,
  தேவ சேனையோ மறைவதே இல்லை!
- சிலுவை வரை வந்தால் தேவ ஜனம்,
  சிலுவையை சுமந்தால் தேவ சேனை!
- உலக சேனையின் கையில்
  உடலை வெட்டும் பட்டயம்,
  தேவ சேனையின் கையில்
  ஆத்துமாவை ஊடுருவும் பட்டயம்!
- செங்கடல்
  பார்வோனின் சேனையை
  வாரிக்கொண்டது,
  தேவ சேனைக்கோ வழிவகுத்தது!
- புழுதியில் எழுதினால் ஜனம்,
  ஜீவ புஸ்தகத்தில் எழுதினால் தேவ ஜனம்!
- வேலைக்காரன் கண்களில் சேனை,
  எலியாவின் கண்களிலோ தேவ சேனை!
- தேவ ஜனமாக புதிய ஜீவியம் தேவை,
  தேவ சேனையாக
  சுவிசேஷ ஊழியம் தேவை!

இயேசுவை ஒருமுறைகூட அறிந்திராத இந்தியர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க தரிசனம் கொண்டுள்ள உங்களுக்கு

# நிர்வாக இயக்குநரின் அஞ்சல்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உன்னதமான நாமத்தில் எங்களது அன்பின் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

இந்தியாண்டின் மூன்று மாத சுவிசேஷப் பணிகளை ஆசீர்வதித்து வந்த கர்த்தரை நன்றியுடன் ஸ்தோத்திரிப்போமாக. ஆயிரக்கணக்கான புதிய விசுவாசிகளின் பெயர்கள் 'ஜீவ புத்தகத்தில்' இடம்பெற்றதற்காக – வல்லமையாய் கிரியைசெய்த கர்த்தருக்கே மகிமைசெலுத்துவோமாக. கிருபையாக நம் ஒவ்வொருவரையும் இத்திருப்பணியில் பல்வேறு முறைகளில் பயன்படுத்திய தேவாதி தேவனுக்கு நன்றியை காணிக்கையாக படைப்போமாக. சுவிசேஷத்தை விசுவாசத்துடனும் தாழ்மையுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொண்ட "தேவ ஜனம்" பணித்தளங்களில் பெருகி வருவதற்காகவும், அவரவர் விளங்கிக்கொள்ளும் பாஷையில் சுவிசேஷமாய் அறிவிக்கும் சுதேச ஊழியர்கள் மற்றும் ஜெபப் பங்காளர்கள் "தேவ சேனையைப்" போல உயர்ந்து வருவதற்காகவும் கர்த்தரை உளமார ஸ்தோத்திரிப்போமாக.

### சுவிசேஷத்தை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்:

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் "பெந்தெகோஸ்தே" நாளன்று உருவான ஆதித் திருச்சபையில் முதல் அருளுரையாற்றின பரிசுத்த பேதுரு அப்போஸ்தலன் தனது சொந்த கருத்துக்களையோ, கொள்கைகளையோ, அனுபவங்களையோ பகிர்ந்து கொள்ளாமல், மரணத்தை வென்று சாத்தானை வெற்றி கொண்டவரான இயேசு கிறிஸ்துவின் ஜீவ வசனங்களைப் பிரசங்கித்தான் என்பதாக வசனங்கள் 14–36 தெரிவிக்கின்றன. அப்போஸ்தலர் 2:41; 13:48; 17:11ல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைகளைச் "சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்" என்பது குறிப்பிடத்தக்கது.

திரள்கூட்ட ஜனங்கள் வசனத்தைக் கேட்டும், அவர்களில் பெரும்பான்மையினர் விசுவாசியாதபடியால் அவர்கள் உள்ளத்தில் "மனமாற்றம்" இடம்பெறவில்லை. அத்தேனே பட்டணத்து ஞானிகளும், செல்வ சீமான்களும், அந்நியர்களும் பவுல் அப்போஸ்தலனின் பிரசங்கத்தைக் கேட்டும் விசுவாசியாதபடியினால் "இகழ்ந்து" பேசினார்கள் மற்றும் மனந்திரும்புதலை "இன்னொரு வேளை" தீர்மானித்துக் கொள்வோம் என தள்ளிவிட்டார்கள் (அப். 17:32). நாளை நமது அல்லவே, அது கர்த்தருடைய கரத்தில் அல்லவா இருக்கிறது என்பதை சிந்திக்கத் தவறிவிட்டார்கள்.

சுவிசேஷத்தை விசுவாசத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரமாகவும் (2:41), ஐயாயிரமாகவும் (4:4), பின்னர் எண்ணமுடியாத எண்ணிக்கையுடனும் (5:14; 11:21) வேதவசனம் வளர்ந்து பெருகியது என்பதுதானே சரித்திரச் சான்று! முதல் முதல் அந்தியோகியா பட்டணத்திலே சீஷர்களுக்குக் "கிறிஸ்தவர்கள்" என்கிற பேர் வழங்கப்பட்டது.

இயேசுவை ஏற்றுக்கொள்வேன்; உலகத்தை அல்ல, மனிதரை அல்ல, என்னை ஏய்த்து மோசம்போக்கும் பிசாசையும் அல்ல; நான் இயேசுவையே ஏற்றுக்கொள் வேன் – இது எமில் ஜெபசிங் அண்ணனின் பாடல் வரிகள் (அப். 16:30–34).

### சுவிசேஷத்தை சத்தியமாக அறிவிக்கிறவர்கள்:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் உள்ள "அனைவரையும்" நேசிக்கிறார். கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற "எவனும்" இரட்சிக்கப்படுவான். "சுவிசேஷ பிரசங்கத்தினாலன்றி" இப்பூவுலகம் பாவ அடிமைத்தனத்திலிருந்து

மீட்கப்பட இயலாது என்னும் சத்தியத்தை பரி. பவுல் ரோமர் 10:12-18ல் விளக்குகிறார். மேலும் இந்தச் சத்தியத்தை வலியுறுத்தும் யோவான் 3:16; 7:37; 5:24; 1 யோவான் 4:15; 5:1 ஆகிய வசன பகுதிகளை தியானித்து பயன்பெறுங்கள்.

செய்தியாளர் இல்லாமல் "செய்தி" பகிரப்படுவது எப்படி? நற்செய்தியை கேட்க ஆவலுடன் ஜனங்கள் இருக்கும்போது, செய்தியை கடத்திவிடுகிறவர் முழுநேர ஊழியராகவோ அல்லது தன்னார்வ ஊழியராகவோ இருக்கலாம். ஆனால் அவர்கள் பிரத்யேகமாக அனுப்பப்படவேண்டும் அல்லது தன்னார்வமாகப் புறப்பட்டுப் போகவேண்டும் (யோவான் 15:16; 2 கொரி. 5:20; எபேசியர் 3:7; மாற்கு 16:15).

சுவிசேஷ வசனங்களை சத்தியமாக அறிவிக்கும் ஓர் "ஆத்தும ஆதாயகனின்" ஆவிக்குரிய பண்புகளில் ஒரு சிலவற்றை குறிப்பிடுகிறேன்.

**1. அழியும் ஆத்துமாக்கள் மீதுள்ள மனதுருக்கம்** (Compassion for the perishing Soul)

"மனதுருக்கம்" என்கிற வார்த்தை "கரிசனை" என்ற வார்த்தையைவிட மிகவும் வலுவான வார்த்தையாகும். மேலும் இது பெரும்பாலும் 'செயலுடன் கூடிய அன்பு" என வரையறுக்கப்படுகிறது. ஜெபத்துடன் கூடிய செயல்பாடு மிக முக்கியம். லூக்கா 15:20; மாற்கு 1:40-41ஐ வாசித்து செயல்படுங்கள்.

**2. பிதாவின் பரிபூரண சித்தத்திற்கு அர்ப்பணிப்பு:** (Commitment to the Father's Perfect Will)

பிதாவின் சித்தத்தை செய்து முடிப்பதே என்னுடைய போஜனம் என இயேசு யோவான் 4:54ல் குறிப்பிடுகிறார். பிதாவின் சித்தம், ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது (1தீமோ. 2:4), அதற்காகவே இயேசுவின் இரண்டாம் வருகை தாமதம் (2 பேதுரு 3:9) என அறிகிறோம். பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என இயேசு யோவான் 20:21ல் மீண்டும் வலியுறுத்துகிறார்.

**3. நேரத்தின் அவசர உணர்வு** (Consciousness of the Urgency of the Hour)

இப்பொழுதே அறுவடை ஆயத்தம் (யோவான் 4:35), நீங்கள் ஆயத்தமா? என இயேசு சீஷர்களிடம் வினவுகிறார். பகற்காலம் இருக்குமட்டும் என்னை அனுப்பினவருடைய கிரியையை செய்யவேண்டும், ஒருவனும் கிரியைசெய்யக் கூடாத இராக்காலம் வருகிறது (யோவான் 9:4) என இயேசு எச்சரிக்கிறார். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள் (எபேசியர் 5:16). இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியும்மட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் (2 இராஜா. 7:9).

## சுவிசேஷப்பணியில் உடன் பங்காளர்கள்:

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவது "மிகப்பெரிய மகிழ்ச்சியை" ஏற்படுத்துவதாக இருந்தாலும் (லூக்கா 15:7) பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அந்தப் பணியில் தங்களை முழுமனதுடன் ஈடுபடுத்திக்கொள்ளாமல் அலட்சியமாக இருப்பதை காண்கிறோம் (நீதி. 29:18). நற்செய்திப் பணியில் ஏற்படும் எதிர்ப்புகள், பிசாசின் சக்திகளால் ஏற்படும் பல தடைகள், சுவிசேஷப் பணியில் உடனடி பலன்கள் கிட்டாமையால் ஏற்படும் தோல்வி பயங்கள், தங்களைக் குறித்ததான தாழ்வு மனப்பான்மைகள், புறமதத்தவர் கேட்கும் கேள்விகளுக்கு தகுந்த விளக்கத்தை வேதத்திலிருந்து சுட்டிக்காட்ட இருதயத்தில் வேத வசன வெளிச்சம் இல்லாமை போன்ற பல காரணங்களால் ஆத்தும ஆதாயப் பணியைப் பலர் புறக்கணிக்கின்றனர்.

பரி. பவுல் அப்போஸ்தலன் 2 கொரி. 5:1-20ல் உள்ள நிருப பகுதியில் தன்னை முன் நிறுத்தி, ஒரு உண்மையான ஊழியன் அல்லது விசுவாசி சுவிசேஷப் பணியில் உடன் பங்காளனாக இருப்பதற்கான சில காரணங்களைக் குறிப்பிடுகிறார்.

1. கைவேலையல்லாத நித்திய வீட்டைக் குறித்த உறுதியான நம்பிக்கை (வசனம் 1-8).
2. இவ்வுலக வாழ்வில் கிறிஸ்துவுக்கு மிகவும் பிரியமாயிருத்தல் (வசனம் 9).
3. கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக ஒருநாள் தனது கணக்கை ஒப்புவிக்க வேண்டும் என்கிற உள்ளான பய உணர்வு (வசனம் 10).
4. இயேசு கிறிஸ்துவின் அன்பு உள்ளத்தை நெருக்கி ஏவுதல் (வசனம் 14).
5. ஒப்புரவாக்குதலின் ஊழியம் கிறிஸ்துவின் கரத்திலிருந்து பெறப்பட்டது, இது மனுஷரால் உண்டானது அல்ல (வசனம் 18-20).

ஆம், பிரியமானவர்களே, நீங்களும் சுவிசேஷ நற்செய்திப் பணியில் உடன் பங்காளர்களாக ஜெபிக்கவும், உதாரத்துவமாக கொடுக்கவும், தன்னார்வமாக உழைக்கவும் முன்வாருங்கள் என அன்புடன் அழைக்கிறோம்.

**நற்செய்திப்பணியின் கனிகளுக்காக கர்த்தரைத் துதியுங்கள்:**

- கடந்த இரண்டு மாதங்களில் பணித்தளங்களில் விசுவாச பிரகடனம் செய்துள்ள 1065 புதிய விசுவாசிகளுக்காக, ஆயத்தப்படும் 12,433 புதிய ஆத்துமாக்களுக்காக கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.
- நிதியாண்டின் மூன்று மாதங்களில் மங்கலப் படைப்பு செய்யப்பட்டுள்ள 20 புதிய ஆலயக் கட்டடங்களுக்காகவும் கட்டுமானப் பணிகள் இடம்பெறும் 98 பணித்தளங்களுக்காகவும் கர்த்தரைத் துதியுங்கள்.
- பதான்கோட்டில் வட இந்திய ஊழியர்களுக்கான பயிற்சி மையம் கட்டப்பட நிலம் வாங்க முன்பணம் செலுத்தப்பட்டுள்ளது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.
- ஜார்க்கண்டு - சத்தீஸ்கடு, மேற்கு தமிழகம், ஆந்திரா, தெலுங்கானா மாநில முகாம்கள் மிகச் சிறப்பாக இடம்பெற்றன, கர்த்தருக்கே மகிமையுண்டாகட்டும்.
- 49 சுதேச ஊழியர்கள் பயிற்சி நிறைவுசெய்து அறியப்படாத கிராமங்கள் நோக்கி விரைந்துள்ளனர், அறுவடையின் எஜமானரே ஸ்தோத்திரம்.
- பணித்தள இளஞ்சிறார்களுக்கென்று பிரத்யேகமாக இடம்பெற்ற விஷ்வவாணி வேனிற்கால வகுப்புகளில் 16,720 பேர் பங்குபெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.
- கல்விப் பணியில் நமது பணித்தளம் சார்ந்த ஆதிவாசி மாணவர்களும், முழுநேர ஊழியர்களின் பிள்ளைகளும் மிகச் சிறந்த மதிப்பெண்கள் பெற்று, உயர்கல்வி பெற முன்னேறியுள்ளனர், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.
- 13 மொழிகளில் வெளியிடப்படும் "சமர்ப்பண்" மாத இதழ் மூலம் சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் குடும்பங்களில் "தரிசன தீபம்" ஏற்றப்படுகிறது.
- சமுதாய மேம்பாட்டு பணிகள் மற்றும் மிஷனெரி ஊழியர்களின் நலன் மூலம் ஆசீர்வதிக்கப்படும், ஆறுதல்பெறும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்காகக் கர்த்தரைத் துதியுங்கள்.

**ஆதரவுக் கரங்கள் நீட்டும் பணிப்பங்காளர்களுக்கு அன்பின் வேண்டுகோள்:**

- சமர்ப்பண் பத்திரிகைக்கு சந்தாவாக ரூ. 100/- செலுத்துங்கள். மாத இதழை கிரமமாக வாசித்து இப்பணிக்காக அனுதினமும் ஜெபியுங்கள். உங்களது விலாசங்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் சேமிப்புப் பெட்டிகளை தியாக காணிக்கைகளால் நிரப்பி, குறைந்தது மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறை உற்சாகமாய் கொடுங்கள்; உங்கள் பிள்ளைகளையும் கொடுக்க ஊக்குவியுங்கள்.
- சுவிசேஷம் ஒருமுறைகூட எட்டியிராத ஒரு கிராம நற்செய்திப்பணிக்கு ரூ. 4000/- மாதந்தோறும் கொடுத்து இப்பணியை துரிதப்படுத்துங்கள்.
- தரிசனப் பணியை மேலும் ஊக்கப்படுத்த சிறப்பு காணிக்கைகளை கொடுப்பதின் மூலம், ஊழிய சார்புத் தேவைகளை சந்தியுங்கள்.

- இப்பணியை உங்கள் வட்டாரத்தில், திருச்சபையில் அறிமுகப்படுத்த ஓர் தன்னார்வ பிரதிநிதியாக செயல்பட முன்வாருங்கள்.
- முன்னேற்றப் பணியில் இணைந்து செயல்பட அர்ப்பணமுள்ள தனி நபர்கள், குடும்பங்களை இப்பணிக்கு அறிமுகப்படுத்துங்கள்.
- தாங்கள் தியாகத்துடன் ஈந்தளிக்கும் காணிக்கைகளுக்கான இரசீது பெற்றுக் கொள்ளும்போது, உங்கள் அலைபேசி எண்ணை தவறாமல் இரசீதில் குறிப்பிட மறவாதிருங்கள். உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

**இந்திய அருட்பணி கூட்டமைப்பு கூடுகை,** (India Missions Association)



மிசோராம் பிரஸ்பிட்டேரியன் மாமன்றத்தின் மூலம் மிசோராம் மாநிலத் தலைநகர் அய்ஸ்வாலில் ஜூன் 11 – 13 தேதிகளில் இடம்பெற்றது. தேசிய அளவிலான 220 நற்செய்திப்பணி அமைப்புகளின் தலைவர்களுடன் விஷ்வவாணி பணியின் சார்பில் என்னுடன் பிராந்திய இயக்குநர்கள் Rev. Dr. அகஸ்டின், Rev. Dr.அசானந்த் லிமா ஆகியோர் பங்கேற்றனர். சுதேச ஊழியர் – இந்திய விசுவாசிகளின் ஈகை மூலம் "அப்புறமான இடங்களுக்குச் சுவிசேஷம்" (2 கொரி. 10:16) என்பதை ஆணித்தரமாக சிந்திக்கவும், ஊழியங்களை வலுப்படுத்தும் திட்டங்கள் கண்டறியவும் தேவன் தரமான நேரங்களைத் தந்தார். 14ம் தேதி இடம்பெற்ற இந்திய அருட்பணி கூட்டமைப்பின் வருடாந்திர பொதுக்குழுக் கூடுகையிலும் தேவ நடத்துதல் உடன் இருந்தது. கர்த்தருக்குச் சித்தமானால் முன்வரும் நாட்களில் மிசோராம் பிரஸ்பிட்டேரியன் திருச்சபைகளோடு இணைந்து விஷ்வவாணி தரிசனங்களை நிறைவேற்றும் சுதேச ஊழியரை தேவன் தருவாராக.

**மணிப்பூர் நிவாரணப் பணிகள்**



15.06.2024 அன்று இரண்டாம் முறை மணிப்பூர் செல்லவும், 4வது முறையாக இடம்பெறும் "நிவாரணப் பணியில்" பங்குபெறவும் பாக்கியம் பெற்றேன். கக்சிங், பிஷ்னுபூர் மற்றும் மேற்கு இம்பால் மாவட்டங்களிலிருந்து பங்குபெற்ற 200 குடும்பங்களுக்கு சுமார் ரூ. 2000/– மதிப்புள்ள அடிப்படைத் தேவையான அரிசி மற்றும் குளிர் ஆடைகளை வழங்க கிருபை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

மணிப்பூரின் தற்போதைய நிலைமை கட்டுப்பாட்டில் இருந்தாலும், அவ்வப்போது வன்முறை சம்பவங்கள் இடம்பெறுவதால், மணிப்பூரின் முழுமையான சமாதானத்துக்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள், தேவைகளில் பங்கெடுங்கள். நமது மிஷனெரி குடும்பங்களைக் கர்த்தர் கிருபையாகப் பாதுகாத்து வருகிறார்; மிஷனெரி ஊழியங்களை உறுதியாகச் செய்துவருகிறார்கள், ஜனங்கள் கர்த்தரை ஆராதனைசெய்து வருகிறார்கள். உங்களுடைய ஜெபங்களுக்கும் உதவிகளுக்கும் மிகுந்த நன்றி.

கர்த்தருடைய பணியில் எங்களை ஊக்கப்படுத்தும் உங்கள் குடும்பத்தினர் அனைவரையும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று. சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள். அப். 13:49, 52

சென்னை
16.06.2024

கர்த்தரின் பணியில்
Rev. Dr. W. வில்சன் ஞானக்குமார்

2009 ஜுன் – விஷ்வவாணி சமர்ப்பண் இதழுக்காக எமில் அண்ணன் எழுதிய சிறப்புக் கட்டுரை

# சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால் தேவ ஜனம், அறிவித்தால் தேவ சேனை!

பிரியமானவர்களே,
'சுவிசேஷ இரதம்' உலகின் எல்லா தேசங்களிலும்,
பாரதத்தின் அனைத்துத் தெருக்களிலும் வலம் வருகின்றது!
விரும்பும் அனைவரும் அதில் திரள் திரளாக ஏறிவிட அதிக இடம் உண்டு!
எல்லோருக்கும் வாய்ப்பு உண்டு! வரவேற்பு உண்டு!
வயது முக்கியமல்ல, ஆண், பெண் அனைவருக்கும் பொதுவானது!
முன்பதிவு தேவை இல்லை, நுழைவு கட்டணம் அவசியம் இல்லை,
யாரது சிபாரிசும் வேண்டியதே இல்லை – விரும்பும் எவரும் ஏறிக்கொள்ளலாம் –
இயேசு மகாராஜாவுடன் உட்கார்ந்து கொள்ளலாம்! செய்துவிட்டால் –
மனம் புதிதாகிவிடும், ரூபம் மறுரூபமாகிவிடும், சரீரம் ஆவியானவரின் ஆலயமாகும்,
வாயில் புதிய பாட்டு, சிந்தை கிறிஸ்துவின் சிந்தை – **அவர்கள் தேவ ஜனம்!**

அந்த இரத்தில் ஏறியவர்கள் தங்களை ஏற்றியவரை, ஏற்றுக்கொண்டவரை –
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை – பறைசாற்றுவார்கள்!
இரதம் ஓட ஓட இரதத்தில் வீற்றிருக்கும் **தேவ ஜனம்**
வீதிகளில், தெருக்களில், கடைகளில், கட்டடங்களில் என்று
எங்கெல்லாம் **உலக ஜனங்களைப்** பார்க்கிறார்களோ
அவர்களையெல்லாம் கூவி கூவி அழைப்பார்கள் –
'ஓ தாகமாயிருக்கிறவர்களே,
நீங்கள் எல்லோரும் சுவிசேஷ இரதத்தில் ஏறிக்கொள்ளுங்கள்,
பணம் வேண்டியதில்லை, உங்களுக்கு மனம் மட்டுமே வேண்டும்,
ஏறினால் உங்கள் ஆத்துமா பிழைக்கும்,
தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளும் கிடைக்கும்' என்று
கூவி கூவி அழைப்பார்கள்!
இரவு, பகல் பாராமல் அழைப்பார்கள்! **அவர்கள் தேவ சேனை!**

பிரியமானவர்களே,
ஐந்து கண்டங்களிலும் கண் காண்பதெல்லாம் பிரச்சனைகளே!
ஐந்து காயங்களை ஜனங்கள் காணாதவரை
அவர்கள் காணப் போவதெல்லாம் பிரச்சனைகளே! காரணம் என்ன?
அவர்களின் அத்தனை பிரச்சனைகளுக்கும் காரணம் பாவப் பிரச்சனையே!
பாவம் என்ற பிரச்சனைக்கு விடை காணாமல்
வருங்காலத்திற்குள் நடையே இல்லை, தடைக்குமேல் தடைகளே!

"என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5) என்ற தகவல்
அந்த ஒரே வசனத்துடன் நின்றுவிடவில்லை,
வேதத்திலுள்ள 31,102 வசனங்களிலும் பிரதிபலிக்கின்றது!

“பாவம் செய்யாத மனுஷன் இல்லையே” (1 இராஜாக்கள் 8:46) என்பது
அந்த ஒரே அதிகாரத்துடன் முடிந்து விடவில்லை,
வேதாகமத்தில் உள்ள 1,189 அதிகாரங்களிலும் தொனிக்கின்றது!

மனிதன் தான் யார் என்பதை
என்று விளங்கிக்கொள்ளுகிறானோ
அன்று ‘இயேசு’ தனக்கு யார் என்பதையும் விளங்கிவிடுவான்,
சுவிசேஷ இரதத்தில் ஏறிவிடுவான்,
சுவிசேஷத்தை அறிவித்தும் விடுவான்!

சுவிசேஷ இரதத்தில் ஏறுகிறவர்கள் யார்?
பிரதான ஆசாரியர்போல்
இயேசுவை நிராகரிக்கிறவர்கள் அல்ல,
பிலாத்துபோல்
இயேசுவை கேள்வி கேட்கிறவர்கள் அல்ல,
யூதாஸ்போல்
இயேசுவின்மேல் எரிச்சல் கொள்கிறவர்களும் அல்ல,
நான் ஒரு பாவி என்று உணர்கின்றவர்களே!
தான் தேவையுள்ளவன் என்பதை உணரும் மனிதன்
சுவிசேஷ இரதத்தில் துள்ளி ஏறுவான் – **தேவ ஜனமாவான்!**
சுவிசேஷத்தை அள்ளிக் கொடுப்பான் – **தேவ சேனையாவான்!**

பிரியமானவர்களே, உலக நாடுகளில், ஆட்சிகளில், அமைப்புகளில்
**பாவ ஜனம், தேவ ஜனம்** என்றோ – **உலக சேனை, தேவ சேனை** என்றோ
ஓர் புள்ளி விபரம் எடுக்கப்படுவதே இல்லை,
அது பைத்தியக்காரத்தனமாகவே தெரியும்!
ஆனால் உலகத்தை ஒரு சொல்லால் உருவாக்கியவர் பார்வையில்
இம்மட்டும் வா, இதற்கு மிஞ்சி வராதே என்று
அலைகளுக்கு ஆணையிடும் வல்லவரின் பார்வையில்
நடைபெறும் ஒரே செயல்: **பாவ ஜனம் எது, தேவ ஜனம் எது என்பதே!**

உலகத்திற்கு பிறந்த தேதி முக்கியம்
பரலோகத்திற்கோ மறுபடியும் பிறந்த தேதியே முக்கியம்!

உலகத்தின் பார்வைக்கு சுத்தமான ஆடை தேவை
பரலோகத்தின் பார்வைக்கோ நீதியின் ஆடையே தேவை!

இன்று தோன்றி, நாளை காய்ந்துபோகும் புல்லுக்கு
நாளை மறுநாள் தன்னைப் படைத்தவர் கண்முன் நிற்கவேண்டும் என்பது
விளங்கிவிட்டால் தாழ்மை வந்துவிடும், மனம் உடைந்துவிடும்,
மெய் மனஸ்தாபம் தோன்றிவிடும், மனம் திரும்பிவிடும்!
இயேசுவுடன் போஜனம் இடம்பெற்றுவிடும்!
அப்பொழுது – **தேவ ஜனம்!**

பிரியமானவர்களே, பாவ விஷம் இதயத்தைக் கவ்வுவதற்கு முன்
ஆதாமிற்கு இருந்த அறிவுதான் என்ன!

ஆதியாகமம் 2:19ன் படி, அத்தனை மிருகஜீவன்களுக்கும்,
பறவை இனங்களுக்கும், நீர்வாழ் ஜந்துக்களுக்கும் பெயரிட்டவன் அவனே!

அவன் கொடுத்த பெயரைக் கூர்ந்து கவனித்த கர்த்தர்
ஆதாம் கொடுத்த எந்த பெயரையும் மாற்றவே இல்லை!
இன்றுவரை அதே பெயர்தான்!
சிங்கம் என்றான், இன்றும் சிங்கமே!
கழுகு என்றான், இன்றும் கழுகுதான்!
விண்ணில் பறப்பதோ,
மண்ணில் நடப்பதோ, நீரில் வாழ்வதோ
அத்தனை ஜீவ ஜந்துக்களுக்கும் ஆதாமிட்ட பெயரே இன்று வரை!
ஆதாமிடம் ஓர் கம்யூட்டர் இல்லை,
ஆயினும் பாவ விஷம் இதயத்தில் ஏறுவதற்கு முன்
தேவ சாயலைக் காத்துக்கொண்ட நாள் வரை
சக்தி வாய்ந்த கம்யூட்டர்களைவிட
ஆதாமின் அறிவு, நினைவு, ஞாபகம் அனைத்தும் சிறந்ததாயிருந்தது!

அதே போன்று
ஆதாமின் ஆற்றல் (சரீர சக்தி) தான் என்ன!
சுமார் 100க்கும் அதிகமான டிராக்டர்கள் இருந்தாலும் பண்படுத்தமுடியாத
பெரும் நிலப்பரப்பான ஏதேன் தோட்டத்தை ஒரு தனிமனிதன் பண்படுத்தினான்.
ஒரு விவசாயியாக ஏதேனை மிக அழகாக பராமரித்தான்!
அது ஆதாமின் வலிமை அல்ல,
தேவசாயலில் தன்னை அவன் காத்துக்கொண்ட நாள்வரை,
அவன் கண்ட தேவ வலிமையே!

ஆனால் என்று பாவ விஷம் இதயத்தைப் பிடித்துக்கொண்டதோ
அன்று துடிதுடித்துப் போனான்!
வெட்கத்தில், பயத்தில் துடிதுடித்துப் போனான்!
இலைகளை வைத்து மூடிப் பார்த்தான், மரங்களுக்குப்பின் ஒளிந்து பார்த்தான்,
முடியவில்லை, தலைகுனிந்தான்!
அன்று குனிந்த தலை நிமிர்ந்தது என்று!
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து
சிலுவையில் தன் ஜீவனைவிட்டு தலைசாய்ந்தாரே– அன்றே!
“தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ
அவன் கெட்டுப்போகாமல் அவரைத் தந்தருளி
இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

தேவனாகிய கர்த்தரின் பேரன்பை
இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற பலியை
விளங்கிக்கொள்கிறவன் எவனோ, விசுவாசிப்பவன் எவனோ
அவன் “கெட்டுப்போவது இல்லை”!
அதன் சரியான பொருள் “செத்துப்போவது இல்லை”

**ஏன்? அவன் தேவ ஜனமல்லவா!**
எப்படி? விசுவாசம்!
யார்மேல்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேல்!
விசுவாசம் அவனை சுவாசமிடச் செய்கிறது –
அது என்ன சுவாசம்?
சுவிசேஷ ஊழியம் என்ற சுவாசமே!

**அவன் தேவ சேனையல்லவா!**

**சுவிசேஷம் எத்தனை வல்லமையுள்ளது என்று பாருங்கள்,**
**பாவ ஜனத்தை தேவ ஜனமாக்குகின்றது!**
**தேவ ஜனத்தை சுவிசேஷம் என்ற சுவாசமிடச் செய்கின்றது,**
**அவர்களை தேவ சேனையாக மாற்றுகின்றது!**

**தேவ ஜனம்** இரவும் பகலும் இயேசுவை ஆராதிக்கும்!
**தேவ சேனை** சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்
இயேசுவை அறிவிக்கும்!
**தேவ ஜனம்** பாவத்தை வெறுக்கும்,
**தேவ சேனை** பாவிகளை நேசிக்கும்,
சுவிசேஷ இரதத்தில் ஏறுங்கள், ஏறுங்கள் என்று கூவி அழைக்கும்!

அந்த வரிசையில் நீங்களும் நிற்கிறவர்களென்றால்
**தேவ ஜனமாக, தேவ சேனையாக** இறுதி நாள்வரை நின்றுவிடுங்கள்!
நிற்க வில்லையே என்று உள்ளம் உணர்ந்தால்
கிருபை உங்களுக்குக் கிடைப்பதாக, இணைந்து கொள்வீர்களாக!
**தேவ ஜனமாக, தேவ சேனையாக**
மனிதர்களை மாற்றும் சுவிசேஷத்தை பறைசாற்ற கடனாளிகளாக
பயப்படாதவர்களாக, வெட்கப்படாதவர்களாக, தாமதிக்காதவர்களாக,
சுவிசேஷ இரதத்தில் ஜனங்கள் ஏறிக்கொள்ள
இயன்றமட்டும் கூவி அழைக்கிறவர்களாக
இதை வாசிக்கும் அனைவரையும் கர்த்தர் வழிநடத்துவாராக,
ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

## ஓர் பிரார்த்தனை

பிதாவாகிய தேவனே, எல்லா ஜனத்திற்கும் தாம் அருளின
“இயேசு” என்ற சுவிசேஷத்தை எல்லா நாவுகளும் உச்சரிக்க
அந்த நாமத்தில் தாழிட்டு வேண்டிக்கொள்ள
பாவ பாரத்திலிருந்தும் மன அழுத்தங்களிலிருந்தும் நிரந்தர விடுதலைபெற,
சுகக் கேடுகளிலிருந்தும் பணச் சிக்கல்களிலிருந்தும்
குடும்பப் பிரச்சனைகளிலிருந்தும், எதிர்கால ஐயங்களிலிருந்தும்
பிசாசின் பயங்களிலிருந்தும் வெளியேற,
தேவனுடைய பிள்ளைகள், தேவ ஜனம் என்ற வரிசையில் இணைய,
தேவ சேனையாக அணிவகுத்துவிட
பரிசுத்த ஆவியானவரை ஊற்றியருளும், வெள்ளம்போல் ஊற்றியருளும்!
கணுக்கால், முழங்கால், இடுப்பளவு அல்ல,
ஆவியானவரின் வெள்ளம் நதிபோல் ஓடட்டும்
ஜனங்களை வாரிக்கொண்டு கல்வாரியில் சேர்க்கட்டும்
ஜனங்கள் தேவ ஜனங்களாகட்டும், தொடர்ந்து தேவ சேனையாகட்டும்
பாவம் ஓயட்டும், பரிசுத்தம் ஓங்கட்டும்,
சாபம் நீங்கட்டும், ஆசீர்வாதம் பொங்கட்டும்
செய்தருளும் பிதாவே, இதைச் செய்தருளும் பிதாவே,
தமது குமாரனின் நாம மகிமைக்காக
தமது ஆவியானவர் மூலம் செய்தருளும் பிதாவே!
அதை எங்கள் கண்கள் காணட்டும், நாங்கள் தம்மை ஸ்தோத்தரிக்கட்டும்
இயேசு என்ற திரு நாமத்தில், ஆமென்.

திருமறை ஆய்வு: அப். 9:31

# வளர்ந்து பெருகுக!

- Rev. Dr. R. பொன் சுபர்சன்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து, பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து பரிசுத்த ஆவியின் வல்லமையோடு புதிய துவக்கமாகிய சபை உருவாகியதை கடந்த இதழ்களில் கண்டோம். சபைக்கு பல அச்சுறுத்தல்கள் எழுந்தாலும், கிறிஸ்துவின் இரத்தத்தினால் உருவாக்கப்பட்ட சபையை, எந்த எதிர்ப்புகளோ, சதிகளோ அசைக்கமுடியாது என்பதற்கு பல சாட்சிகள் அப்போஸ்தலர் நடபடிகளிலே உண்டு. சூழ்நிலைகளைத் தாண்டி சுவிசேஷ ஊழியம் வளர்ந்தது. சபைகள் பெருகின, மட்டுமல்ல, "அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (அப்போஸ்தலர் 9:31). இவ்வசனத்தை நாம் சிந்திக்க ஆயத்தப்படுவோம்.

சபை துவங்கிய நாளிலிருந்து பல சம்பவங்களை லூக்கா எழுதுகின்றார். யூதாசுக்குப் பதிலாக மத்தியா தெரிந்தெடுக்கப்படுதல், பேதுருவும் யோவானும் சிறைச்சாலை யில் வைக்கப்படுதல், அனனியா சப்பீராளின் மரணம், சபையில் உண்டான சலசலப்புகளை அப்போஸ்தலர்கள் அணுகிய விதம் நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. தொடர்ந்து ஸ்தேவானுடைய மரணம், சிதறடிக்கப்பட்ட சபை, சபைக்கு எதிரான சவுலின் மத வைராக்கியம் எனப் பல கொடிய சம்பவங்கள் குறுக்கிட்டும் சபை வளர்ந்ததே தவிர, அழியவில்லை; 3000, 5000 என விசுவாசிகள் பெருகினர். எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம், பிலிப்பி பட்டண மகிழ்ச்சி, சீஷர்கள் பெருக்கம் என சபை வளர்ச்சியையே காணமுடிகின்றது. பாடுகள், பிரச்சனைகள் என்றாலும் அவிசுவாசம் வளரவில்லை, எதிர்ப்புகளைக் கண்ட விசுவாசிகள் வீட்டில் முடங்கிவிடவும் இல்லை. நமக்கே தேவைகள் அதிகம் உண்டு என்று எண்ணி யூதேயா, சமாரியா நாடுகளுக்கு சுவிசேஷத்தை அனுப்ப சபை தயங்கவுமில்லை. சுவிசேஷ ஊழியர்களுக்குத் தங்கள் வாசல்களை அடைக்கவும் இல்லை. இது ஓர் வல்லமையுள்ள சபையின் பண்புகளை நமக்குக் காட்டுகிறது. ஆதிசபையில் காணப்பட்ட ஆவிக்குரிய நிலைமையை லூக்கா எழுதுகின்றார்.

முதலாவது, 'சபைகள் சமாதானம் பெற்றது' என்று பார்க்கிறோம். சமாதானம் என்பதற்கு கிரேக்கத்தில் ஏரேனின் Eirenen என்ற வார்த்தை, ஆத்தும அமைதி பெற்றார்கள் அல்லது மன நிறைவு அடைந்தார்கள் என்ற அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளது. எருசலேம் தேவாலயப் பிரதானிகளால் வந்த எதிர்ப்பும், சவுலின் துன்புறுத்தலும் சபையில் தொடர்ந்துகொண்டேதான் இருந்தது. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியினால் இங்கு சவுல் தொடப்பட்டு, பெரும் மாற்றம் ஏற்பட்டதை நாம் காணமுடியும். சவுல் மாற்றம் பெற்றாலும், எருசலேம் சபையிலிருந்த பிரதானிகள் மூலமாக தொடர்ந்து சபைக்கு மிரட்டல்கள் வந்துகொண்டேதானிருந்தது. ஆனால் அன்று ரோமப் பேரரசனாக இருந்த கலிகுலா தன் சிலையை எருசலேம் தேவாலயத்தில் வைக்கவும், அனைவரும் வணங்கவும்வேண்டும் என்று விரும்பினான். ஆகவே தேவாலயத் தலைவர்கள் சபையைத் துன்பப்படுத்துவதைச் சற்று தள்ளிவிட்டு, தங்கள் ஆலயத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் இறங்கினர். எனவே இப்பொழுது சவுலின் மூலமாகவும் பிரச்சனைகள் இல்லை, தேவாலயத் தலைவர்களிடமிருந்து வரும் பிரச்சனைகளிலிருந்தும் சற்று விடுதலையிருந்தது. தேவன் தம் திட்டத்தை நிறைவேற்ற எல்லா விதங்களிலும் செயல்படுகின்றார்.

தத்துவ ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் வேறுபட்ட யூதேயா, சமாரியா, கலிலேயா

என்ற மூன்று பகுதிகளை லூக்கா கூறுகின்றார். ஆனால் சுவிசேஷம் அனைவரையும் ஒன்றிணைத்தது. சுவிசேஷத்தினால் தொடப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் வளரத் துவங்கினார்கள். சமாதானமான நாட்களை சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், எதிர் நாட்களில் எச்சூழ்நிலைகள் வந்தாலும் அவற்றைக் கடந்துசெல்லவும் தங்களை ஆயத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்தினார்கள். இன்று ஆண்டவர் நமக்குத் தந்திருக்கின்ற சமாதானத்தின் நாட்களை ஆவிக்குரிய அநுபவங்களில் வளருவதற்கும் சுவிசேஷப் பிரபல்யத்திற்கும் பயன்படுத்தவேண்டுமென்பதையே இப்பகுதி நமக்குக் கற்றுத்தருகிறது.

இரண்டாவதாக, 'சபை பக்தி விருத்தியடைந்தது' என்பதைப் பார்க்கிறோம். பக்தி விருத்தி என்பதற்கு ஒய்கோடோமியோ – oikodomeo என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு கட்டப்படுதல், உருவாக்கப்படுதல், உறுதியாக நிலைநிற்பது, நிறுவப்படுதல் என பல அர்த்தங்கள் உண்டு. மேலும் ஆவிக்குரிய வாழ்வில் வளருதல் எனும் பொருளையும் இவ்வார்த்தை உணர்த்துகிறது. ஆக, சபை விசுவாசத்தில் உறுதிப்பட்டு, வளர்ந்து, மற்றவர்கள் அறிந்துகொள்ளும் அளவிற்கு மேலோங்கியது. இதே வார்த்தை oikodomeo தான் 'என் சபையைக் கட்டுவேன்' என்று இயேசு கூறும் வசனத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எப்படிக் கட்டினார் என்பதை எபேசியர் 4:11–15ல் பவுல் எழுதுகிறார். 'பக்தி விருத்தி' என்பதை பூரண வளர்ச்சி அல்லது பூரண புருஷர்களாகும் வரைக்கும் என்று காண்கிறோம். அவசியத் தேவையைப் பூர்த்திசெய்வது யார் என்பதை வசனம் 15ல் குறிப்பிடுகிறார். சபை பக்தி விருத்தியடைவதற்காகவே சிலர் அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகர்களாகவும், மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பில் உறுதியாய் இருந்து, கொடுக்கப்பட்ட பணியைச் சரிவர செய்ததால், சபை பக்தி விருத்தியடைந்தது.

சபை பக்திவிருத்தி அடைந்ததின் அடையாளம் என்ன? விசுவாசிகள், தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் வளர்ந்தார்கள், பூரண புருஷராக மாறினார்கள்; பரிசுத்தவான்களைச் சீர்பொருந்தப்பண்ணச் செய்யவும் சத்தியத்தைக் கைக்கொள்ளவும் சபைகள் உந்தித் தள்ளின; இவை மூலம் கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் வளர்ந்து பெருகின என்று அறியலாம். அவ்விதம் சபை வளர்ந்து பெருகக் காரணம், சபையைக் கட்ட அழைக்கப்பட்டவர்கள் தங்கள் கடமையை சரியாகச் செய்ததே. பக்தி என்ற பதத்தை அணிகின்ற ஆடைகளை வைத்தும், திருச்சபை சட்டங்களை வைத்தும், ஆலயம் செல்வதை வைத்தும், அமைதியான வாழ்க்கையை வைத்தும் அநேகர் கணிப்பது உண்டு. ஆனால் இன்றைய சபைகள் விசுவாசத்திலும் தேவ அறிவிலும் வளர்ந்து பெருகியிருக்கிறதா? சீர்பொருந்துதல் இருக்கிறதா? சத்தியத்தைச் சரியாகக் கைக்கொள்ளுகிறோமா? கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் வளர்ந்து பெருகியிருக்கிறோமா? எனும் கேள்விக்கணைகளுக்கு நம்மில் பதிலுண்டா?

மூன்றாவதாக, கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் குறித்து லூக்கா எழுதுகின்றார். ஆதிசபைகளில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருந்தது. பயம் என்பதற்கு போபோஸ் Phobos என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நடுநடுங்கி விலகிச்செல்லுதல் எனும் பொருள் தராமல், மாறாக மெய்த்தேவனை அறிகிற அறிவின் மூலம், கர்த்தருக்குக் கனம் கொடுத்து, இன்னும் அதிகமாக அறியும்வண்ணம் அவரைக் கிட்டிச்சேருதல் என்பதாகும். நீதி. 1:7; 8:13; 10:27; 14:26–27; 16:6; 19:23; 22:4 ஆகிய வசனங்களிலே கர்த்தருக்குப் பயப்படுதல் என்று வரும் இடங்களிலே வாசித்துப்பார்த்தால், பயப்படுப்படுதல் மூலம் நம்பிக்கை, மரியாதை, ஆராதனை, கீழ்ப்படிதல் எனும் நற்செயல்கள் வருவதைக் காணமுடிகிறது. அப்படியானால் தேவன்

விரும்பாத – அவர் மனதைக் கவலையுறச் செய்யும் செயல்களை செய்வதை விட்டு விலகி, விசுவாசத்திலும் ஆராதனையிலும் அவருக்குச் சேவை செய்வதிலும், அவர் சித்தம் செய்வதிலுமே கர்த்தருக்குப் பயப்படும் திருச்சபை பூரணமாய் ஈடுபடும்.

இறுதியாக, 'சபைகள் பரிசுத்தாவியின் ஆறுதலோடு வளர்ந்து பெருகின'. ஆறுதல் என்பது கிரேக்கத்தில் பாராக்ளீசே Paraklesei. இதன் சரியான அர்த்தம் தேற்றரவாளன், ஆறுதல் செய்கின்றவர் என்பதாகும். பரிசுத்தாவியானவரைக் குறித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறும்பொழுது தேற்றரவாளன் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றார் (யோவான் 14:16,26). காரணம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வோரின் இருதயத்தில் பரிசுத்தாவியானவர் வந்து வாசம்செய்கிறார். அதுமாத்திரமல்ல, சகல விதத்திலும் அவரே நமக்கு உதவிசெய்கிறவராக, ஆறுதல்செய்கிறவராக, நமக்காக நம் அருகில் நிற்கின்றார் என்று வசனங்கள் கூறுகின்றது; மட்டுமல்ல, இயேசு கற்றுக்கொடுத்த யாவற்றையும் நாம் கைக்கொள்ள நம்மை நினைப்பூட்டுகிறவராகவும் இருக்கின்றார். இதை உணர்ந்து பரிசுத்தாவியானவரின் செயல்களுக்கு செவிகொடுத்த சபை வளர்ந்து பெருகிற்று.

இன்றைக்கு நம் சபைகளின் வளர்ச்சி எப்படி? நம் சபையின் வளர்ச்சியைக் கணக்கிடப் பயன்படுத்தும் அளவுகோல்தான் என்ன? ஆத்துமாக்களுக்குப் பதில் ஆலயமோ? ஆராதனைக்குப் பதில் வழிபாட்டு முறைமைகளோ? நிலங்களும், கட்டடங்களும் பெருகுவதுதான் சபை வளர்ச்சியோ? கிறிஸ்துவின் இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட சபையைக் கண்காணிக்க முன்னாட்களில் அர்ப்பணித்து, தற்போது பண ஆசையில் விழுந்து, பொருளாசையில் மூழ்கி, பதவிவெறியில் சிக்கி, விசுவாசிகளைப் பக்திவிருத்திக்கு நேராக நடத்துவதை விட்டு நரகம் நகர்த்துவதைக் காணும் நம் கண்கள் குளமாகிறதே. அன்று யூதேயா, கலிலேயா, சமாரியா தேசத்திலுள்ள சபைகளில் இருந்த நற்செயல்கள், விசுவாச நம்பிக்கை நம் சபைகளிலும் தோன்றுவது எப்போது?

தற்கால சபைகள் ஆதிசபைகளின் தடம் நடந்தால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சம்பாதித்த சபையின் வளர்ச்சியை மனித முயற்சிகள் மட்டுப்படுத்தவே முடியாது. வளர்ந்து வளர்ந்து வளர்ந்தோங்கும் என்பதே அப்போஸ்தலர் 9:31 கூறும் சத்தியம்.

## கர்த்தர் தாமே கண்ணீர் துடைப்பாராக!



தெலுங்கானா மாநிலம் கம்மம் மாவட்டத்தின் ஊட்கூர் பணித்தள ஊழியர் ஆதாம் என்பாரின் மனைவி திருமதி. ராகேல் ஆதாம் (வயது 45) 01.06.2024 அன்று அதிகாலையில் மகிமைக்குள் பிரவேசித்தார்கள். மனநோயின் தாக்கத்தில் துவங்கி, சரீர உறுப்புகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவ முயற்சிகளில் பலன் கிட்டவில்லை; பணித்தளம் விட்டு பரம தேசம் சேர்ந்துள்ள திருமதி. ராகேல் ஆதாமின் ஊழியக் காலங்களுக்காகக் கர்த்தரைத் துதிக்கிறோம், ஊழியர் ஆதாம், பிள்ளைகள் ரத்னா, ரசூஷிதா ஆகியோருக்கு ஆறுதலின் தேவன் நற்சகாயராய் இருப்பாராக.



இராமநாதபுரம் வட்டார விரிவாக்கப் பணி ஊழியர் வெங்கடேசன் டேனியல் என்பாரின் மனைவி திருமதி. பிரியா (வயது 33) 10.06.2024 அன்று நித்தியம் பிரவேசித்தார்கள். தேவ பணியில் தன் கணவருக்கு மிகுந்த ஒத்தாசையாகவும் விசுவாச ஜீவியத்தில் இயேசுவுக்குள் ஸ்திரமாகவும் வாழ்ந்த அன்பு சகோதரி, கடந்த மே 13 அன்று சாலை விபத்திற்குள்ளாகி, தொடர் சிகிச்சைகளுக்குட்பட்டார்கள்; "என்றும் கர்த்தாவுடன்" இளைப்பாறுகிறார்கள். அம்மாவின் முகத்திற்காக ஏங்கும் 5 வயது மகன் ஜோஷ்வா, ஊழியர் வெங்கடேசன் ஆகியோருக்கும், பெற்றோர் மற்றும் குடும்பத்தாருக்கும் சகல ஆறுதலையும் தேறுதலையும் தேவன் தந்தருள ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.

## அறுவடையின் எஜமானருக்கு ஸ்தோத்திரம்!



முதல் தலைமுறை விசுவாசிகள் மத்தியில் கர்த்தருக்கென்று ஓர் ஆலயம் கட்டிய பின்னரே தங்களது வீடு கட்டும் பணியைத் துவங்கவேண்டுமென்ற பொருத்தனையினிமித்தம் 2012ம் வருடம் துவக்கம் ஜெபத்துடன் சிறுக சிறுக சேமித்து வந்தனர் திரு. ஜெயசிங் சார் குடும்பத்தினர். நல் விருப்பங்களை நிறைவேற்றும் வல்லமைகொண்ட கர்த்தர் தாமே காரியங்களைக் கைகூடி வரப்பண்ணினார். ஆந்திராவின் மன்யம் மாவட்டத்தின் மலையடிவாரத்தில் வெங்கயலகெட்டா தளத்தில் தேவ மகிமை தங்கும் வாசஸ்தலமாய் எழும்பிய ஆலயத்தை 19.05.2024 அன்று பிரதிஷ்டை செய்தோம். பாளையங்கோட்டையில் இருந்து 5 பேர் கொண்ட குழுவாகச் சென்ற எங்களுக்குத் தளங்களில் தேவன் வெளிப்படுத்தியதெல்லாம், “தேவ திட்டங்களின் நிறைவேறுதல் — தேவ பிள்ளைகளின் மூலமாகவே” என்பதே! திரு. ஜெயசிங் ஐயாவின் சந்ததியைத் தேவன் ஆசீர்வதிப்பாராக.

ஜூன் 6 அன்றும் எங்கள் தளப் பயணங்கள் ஆந்திராவின் அரக்குப் பள்ளத்தாக்குகளில் அமைந்தது! தேவன் தங்களுக்கு வழங்கும் ஈவுகளைத் தேவனுக்கு நன்றிபலியாகப் படைக்கவேண்டும் என்ற மனோவாஞ்சை கொண்டிருந்த திருமதி. குளோரி பால்ராஜ் அவர்களது குடும்பத்தினருக்குக் கர்த்தரின் நன்மைகள் ஏற்றவேளையில் வந்தது; களத்தில் கர்த்தருக்காய் ஓர் ஆலயம் எழும்ப சமூலமாய்ச் சமர்ப்பித்த இக்குடும்பத்தினர் வாயிலாக பக்கபு பணித்தளம் ஆராதனைக் கூடம் கண்டது; 09.06.2024 அன்று தேவ கிருபையால் பிரதிஷ்டை ஆராதனை இடம்பெற்றது. தளங்களில் திரளான அறுவடையையும், தாங்குவோர் உள்ளங்களில் மிகுந்த சந்தோஷத்தையும் கொடுத்து, தமது மகா இரட்சிப்பின் திட்டத்தை இப்பூவுலகில் நிறைவேற்றும் இயேசு இராஜாவுக்கு ஸ்தோத்திரம்.




— பயணக்குழுவுடன் ஊழியர் கிறிஸ்டோபர் ஜேம்சன்.

## இயேசு என் ஜீவனின் பெலன்



மெய்த் தேவனைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் சிறுவயதிலிருந்தே எனக்குள் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. வாலிப பருவம் வந்தும், புத்தகங்கள் பல புரட்டிப் படித்தும் என் வாஞ்சையோ விடைகாணவில்லை; நண்பர்களுடன் உண்டான சம்பாஷனைகளிலும் முடிவு எட்டவில்லை. சபால் லேகாய் கிராமத் திற்கு வந்த ஊழியரைச் சந்தித்தேன்.

கைப்பிரதி ஒன்றை என் கரத்தில் கொடுத்து, தேவ அன்பை விவரித்தார்; இயேசு என்ற நாமத்தைக் குறித்து அறிய, அறிய என் இதயத்தை பெரும் சந்தோஷம் நிரப்பியது. இயேசுவில் பாவ மன்னிப்பு, பரிசுத்த ஜீவியம், நித்தியம் எனும் மார்க்கமே மகிமையின் மார்க்கம் என்பதை என் மனம் உணர்ந்தும் விட்டது. கடந்த 8.5.2024 அன்று நள்ளிரவில் மரணத்துடன் போராடினேன். மரணத்தை ஜெயித்த இயேசு இராஜா என்னைக் கைவிடவில்லை; மறுவாழ்வு தந்தார். வேதபாட வகுப்புகள், ஆராதனைகள் என்று பங்கெடுக்கும் இடங்கள்தோறும் இயேசுவையே உயர்த்துகிறேன்; ஆம், என் சுவாசமும் உயிரும் அவரே! – இடோமாச்சா சிங், மணிப்பூர்

### சமர்ப்பண் பத்திரிகைக்குச் சந்தா அனுப்புவதற்கான வங்கி விபரங்கள்

A/C Name: VISHWA VANI SAMARPAN
Bank: STATE BANK OF INDIA
A/C No.: **1040 845 3024**
IFSC Code: **SBIN0003870**
Branch: ANNANAGAR WEST, CHENNAI

இரசீது அனுப்புவதற்கு உதவியாக, தயவுகூர்ந்து தங்கள் முகவரியைத் தெரிவியுங்கள்.
✆ 09443127741



# கிளைகள் கழிக்கப்படட்டும், களைகள் பிடுங்கப்படட்டும்

**பெரும்** புயல் கரை கடந்த பின், குப்பை கூளங்களாகக் கிடக்கும் கடற்கரை போல தேர்தலுக்குப் பின் தேசம் கிடக்கிறது. தேர்தல் கொண்டுவந்த வாக்குறுதிகள், கூட்டங்கள்–கூச்சல்கள், ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்கு முழங்கிய கோஷங்கள்– உண்மைகள்– பொய்கள், தங்கள் தரப்பு நீதி, நியாயத்தையே மிகைப்படுத்திய தருணங்கள், மற்றோர் செய்த நன்மைகளைத் தீமைகளாக மாற்றிய சூழ்ச்சிகள் என எக்கச்சக்க அழுக்குகள் இறைந்து கிடக்கின்றன.

அக்கூளங்களில் ஏதாவது தின்னக் கிடைக்குமா எனத் தேடி அலையும் எலிகள், காக்கைக் கூட்டங்களைப் போல இணைய தள மீம் கிரியேட்டர்கள் தங்கள் மன விருப்பங்களை கார்ட்டூன்கள், வெட்டி எடுக்கப்பட்ட திரைப்பட துண்டுகளின் வாயிலாக வைத்து, வெற்றிபெற்றவர்களையும் தோல்விகண்டவர்களையும் துவைத்து துவைத்து எடுத்து காயப்போடுகிறார்கள். அவர்கள் துவைத்துப் போட்ட அந்த துண்டுகளைக் கட்டிக்கொண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக் குளிக்கும் இணையதளவாசிகள் தம் நண்பர்களுக்கும் அவைகளை அனுப்பி இன்பம் காண்கிறார்கள். மொத்தத்தில் ஒரு பெரும் ஜனநாயக தேசத் தேர்தல் ஒரு தரப்பினருக்கு வெற்றியாகவும், மறு தரப்பினருக்கு நம்பிக்கையாகவும், இன்னும் சிலருக்கு தோல்விமுகமாகவும், இளையோருக்கு இணையத்தில் சிரித்துக்கொள்ளும் முச்சந்தியாகவும் மாறிவிட்டது.

புயலுக்குப்பின் பேரமைதி போன்று, தேசத்திற்காக ஏறெடுக்கப்பட்ட எழுப்புதல் ஜெபங்களில் முன்னணியில் நின்று கண்ணீரோடு பாரப்பட்டவர்களும் ஜெபித்தோரும் சற்றே சிறிய விடுமுறையில் சென்றுவிட்டார்கள். காலையிலும் மாலையிலும் காற்று வாங்கி, கர்த்தரின் படைப்பில் மகிழ்ந்து, தம் உடல் – உள்ளத்தைச் சுறுசுறுப்பாக்கிக் கொள்ள விரும்பி நடைபயில்வோரோ, மாலையில் பெற்றோரோடு வந்து விளையாடும் குழந்தைகளோ, அவர்களை மகிழ்விக்கும் வியாபாரக் கூடங்களோ இல்லாமல், அசுத்தங்களின் மேல் தங்கள் அலைகளை மாறி மாறி அனுப்பிக் கொண்டேயிருக்கும் கடற்கரையினால் யாருக்கு என்ன பயன் வந்துவிடமுடியும்? மீண்டும் இக்கடற்கரை ஓரங்களில் சிறுபிள்ளைகளின் கால் தடங்கள் பதிக்கப் படுவதற்கும் தண்ணீரைக் கண்டு அவர்கள் ஆனந்தமாய் குதூகலிக்கும் சத்தங்களைக் கேட்பதற்கும் அது சுத்தப்படுத்தப்படவேண்டுமல்லவா? அது யாருடைய பணி? கலைத்துப் போட்ட துணிக்கடையைப் போலக் கிடக்கும் இந்நேரத்தில் தேசத்திற்காக ஜெபிக்க, தேசத்தின் சில ஜெபக் கரிசனைகளுக்காக பாரப்படுவது நம் அனைவரது கடனாகவே இருக்கிறது.

மனித மனங்கள் வரைந்த கணக்கின்படி தீர்ப்புகள் வரவில்லை என்பது ஒரு பக்கம் நமக்கு சோர்வளித்தாலும் தேவன் மகா ஞானமாய் சில காரியங்களை செய்திருக்கிறார் என்பதை விசுவாசிகள் உணரும் நேரமிது. கடந்த பத்தாண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக இத்தேசத்தின் சிறுபான்மையினர்மேல் படர்ந்து குத்திக் கிழித்த

முட்செடியின் வேருக்கு வெந்நீர் ஊற்றப்பட்டிருப்பதை – அசைக்கப்பட்டிருப்பதை உணர முடிகிறது. ஒரு ஜனநாயக தேசத்தின் அனைத்து குடிமக்களுக்கும் பொதுவான – சமயச் சார்பற்ற, வாழ்வாதாரத்திற்கு மிகுந்த நம்பிக்கை அளிக்கக்கூடிய தலைமை பொறுப்பில் இருக்கவேண்டிய பிதாமகனை தேசம் தேடுகிறது என்பதே உண்மை.

இன்னும் பல படிகள் ஏறலாம் என்கிற ஆமானின் அந்தரங்க ஆலோசனைகள், அகிதோப்பேலின் ஆலோசனைகள் போல அவமாக்கப்பட்டிருப்பது, கண்ணீரோடு ஜெபித்த அத்தனை ஜெபங்களுக்கும், தேவன் தம் பரம ஞானத்தின்படி அளித்த பதில்! இதுவரை மல்யுத்த வீரர்களைப் போல் கைகளையும் கால்களையும் முறுக்கி கொண்டு யாரை வீழ்த்தலாம் என இருந்த கூட்டம், இப்போது இரண்டு அடி எடுத்துவைப்பதற்கு இரண்டு பேரின் கைலாகு தேவை என்ற நிலையில் இருப்பது காட்சிப்புலனாகிவிட்டது. நீதியின் தேவன் தம் நியாயத்தீர்ப்பைக் கையில் எடுக்கும் காலம் நிச்சயமாக வந்தே தீரும். இத்தேசத்திற்காகப் பாரத்தோடு கண்ணீர் விடுகிறவர்களின் தொகை அதிக மாகிக் கொண்டே வரும்போது தேவன் அற்புதங்களை செய்யத் துவங்கி விடுகிறார்.

அப்பாவின் அழைப்பு ஒன்று வருகிறது: "மகனே, உன் சகோதரரைச் சென்று நலம் விசாரித்து விட்டு வா" என. அன்பின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் கடைசி மகனாக நாம் இருக்கிறோம். நம் கையில் இருக்கும் பொறுப்புகள், வளங்களை நம் சகோதரருக்காக விட்டுக்கொடுக்கவும் நாம் தயாராக இருக்கவேண்டும். அவர்களைத் தேடி, காடு மேடாக அலையும் வனாந்தரப் பாதை ஒன்றும் நமக்கு இருக்கின்றது. நமக்கு என்ன வேண்டுமென்றாலும் நேரலாம். ஆனால் தகப்பனுடைய வார்த்தை உன் சகோதரரைத் தேடிச்சென்று, அவர்கள் நலமாக இருக்கிறார்களா என்ற சுகசெய்தியை எனக்குச் சொல்லவேண்டும் என்பது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் தாவீது தன் கைவசம் இருந்த கொஞ்ச ஆடுகளை இன்னொருவர் வசத்தில் விட்டுவிட்டு தன் தகப்பனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தவராக சகோதரரைத் தேடிப் புறப்பட்டார். அங்கே தேசமே பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கின்றது. தன் ராஜாவின் ராணுவமும் தன் ராஜாவும் பயந்தவர்களாக, விடை தெரியாதவர்களாகக் கலங்கிக்கொண்டிருக்கிறார்கள். அண்ணன்மாரின் சுகசெய்தியை அப்பாவுக்குச் சொல்லலாம் என்றால், இங்கே தேசமே சுகம் இல்லாமல் இருக்கிறதே! ஒரே ஒரு மனிதனைக் கண்டு, ஒட்டுமொத்த ராணுவமும் கலங்கி நிற்கிறதே!

அன்பிற்குரியவர்களே, இப்படித்தான் நாமும் இருந்தோம். சவுலுக்கும் அவனோடு இருந்த இஸ்ரவேலின் ராணுவத்திற்கும் நெஞ்சில் பயத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. ஆனால் தாவீது என்ற அந்த ஒருவனுக்கு மட்டும் சற்றும் பயமேயில்லை. நாள்தோறும் தனது சுரமண்டலத்தினால் துதித்துக் கொண்டிருந்த இஸ்ரவேலின் ராணுவங்களின் தேவனை உடன்படிக்கை இல்லாத ஒரு மனிதன் பழிப்பதைக் கேட்கும்போது, தாவீதின் இரத்தமெல்லாம் கொதிக்கின்றது. காரணம், அவனுக்குள் இருந்த அபிஷேகம். கர்த்தரை எக்காலமும் ஸ்தோத்தரித்துக்கொண்டு, அவர் துதியை எப்போதும் வாயில் வைத்துக் கொண்டிருந்த அந்தப் பாடகனுக்குள் இருந்த வேகமும் தைரியமும் வெறியும் இராணுவப் பயிற்சி பெற்றிருந்த சவுலின் வீரர்களுக்கு இல்லை.

இங்குதான் தாவீதிற்கும் இஸ்ரவேலின் மற்ற இராணுவத்திற்குமான வித்தியாசம் பளிச்செனத் தெரிகிறது. அழைப்பும் அபிஷேகமும் பெற்ற மனிதர்கள் அவர்கள் செயலாற்றவேண்டிய இடமும் நேரமும் வரும்போது மகா தைரியசாலிகளாக மாறிவிடுவார்கள். மற்றவர்கள் கோழைகளாக நடுங்குவார்கள். கோலியாத் என்ற அந்த வெறியனின் பழிச்சொல்லை வாங்கி, வைத்துக்கொள்ளமுடியாத கோபக் காரனாக கடகடவென ஓடி, ஆற்றில் மூழ்கி, ஐந்து கூழாங்கற்களை எடுத்து, அடைப்பத்தில் போட்டுக்கொண்டு திரும்புகிறார் தாவீது. சர்ர் சர்ர் என்று சுழற்றி, அவன்

தலையை உடைக்கிறார். வீரனாக வாயளந்தவன் கோழையாகச் சாய்கிறான். பெரும் வெற்றியின் முழக்கம், ஆர்ப்பரிப்பின் சத்தம் வானைப் பிளக்கிறது. எதிரியின் ராணுவம் கலைந்து ஓடுகிறது; இஸ்ரவேலர் வெற்றியைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் இனிதான் நாம் செயலாற்ற வேண்டிய நேரம் வருகிறது.

ஜீவ தேவனைக் குறித்த பயமும் நடுக்கமும் பூலோகத்தாருக்கு வரவேண்டும் என்றால், விசுவாசிகள் அகத்தியமாய்ச் செய்யவேண்டிய வேலை ஒன்றை தாவீது செயல் விளக்கமாகச் செய்து காண்பித்தார். அதுதான் வீழ்ந்துகிடப்பவனின் மீது ஏறி நின்று அவன் பட்டயத்தை உருவுவது. அவனது பட்டயத்தையே வைத்து, அவன் தலையை வாங்கிப்போடுவது. அடைப்பப் பை கல்லினால் மண்டை ஓடு பிளந்தாலும், கோலியாத்தின் வாளை உருவி, அவன் தலையைத் துண்டிப்பது தாவீதுக்கும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் அவசியமாயிருந்தது (1 சாமு. 17: 46-51).

வாள் உருவுதல், பட்டயம் எடுத்தல் என்பதை புதிய உடன்படிக்கையின் வெளிச்சத்தில் தியானிக்கும்போது, தேவ வசனங்களை அதன் அதிகாரத்தோடு கையில் எடுப்பது. விசுவாசிகள் எவருக்கும் எதிரிகளோ அல்லது வாளைத்தூக்கிக் கொண்டு அலையும் கூட்டமோ அல்லவே அல்ல; அதிகபட்சமாய் அவர்களுக்குத் தெரிந்த தெல்லாம் ஜெபம் மட்டுமே! கிறிஸ்து மார்க்கம் அன்பின் மார்க்கம். இம்மார்க்கத்தின் செய்திகளை அதை அறியாத மனிதருக்கு ஒரு முறையேனும் எடுத்துக்கூறி, பரலோக வாழ்வுக்கான வசதியைச் செய்துகொடுப்பது பரம தேவனின் அன்பின் கட்டளை. கட்டளையைச் செய்ய வாய்ப்பு மறுக்கப்படும்போதெல்லாம் அறையைப்பூட்டி கண்ணீரோடும் பாரத்தோடும் ஜெபிக்கும்போது, சிறையின் அஸ்திபாரங்களைக்கூட அசைப்பதற்குத் தேவன் சர்வ வல்லமையுள்ளவராக இருக்கிறார் (அப். 12:1-10).

அழைப்பும் அபிஷேகமும் பெற்ற தாவீதைப் போல கோலியாத்துகளை வீழ்த்தும் வீரர்களாக எழும்பவேண்டிய நேரமிது. சத்திய வசன வீரர்களாக, அதை ஆழ்ந்து படிக்கும் ஆராய்ச்சியாளர்களாக (எஸ்றா 7:10) விசுவாசிகள் யாவரும் மாறவேண்டும். வேத வசனங்களை ஆராய்ந்துபார்க்கும்போது அது நித்திய ஜீவனுக்கு ஏதுவானதாக மாறிவிடுகிறது (யோவான் 5:39). இருபுறமும் கருக்குள்ள அந்தப் பட்டயம் (எபி. 4:12) நம்மையும் செதுக்கி எதிரிகளையும் வீழ்த்துகிறதாய் இருக்கிறது. தேவன் நமக்குத் தந்திருக்கும் போராயுதங்கள் ரத்தமும் சதையும் ஓடுகின்ற மனிதர்களின் மாம்சத்தை கிழிப்பவை அல்ல; மாறாக, ஆத்துமாக்களை அன்பினால் துளைப்பவை.

எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். 1 தீமோத்தேயு 2:1-4

புதிய அரசு விடியும் இக்கால கட்டங்களில் தேவன் நமக்குத் தந்திருக்கும் வசனங்களை சொல்லிச்சொல்லி ஜெபிக்கவேண்டும். கடந்த ஆண்டுகளைப் போல சுவிசேஷத்திற்கும் அன்பின் நற்செய்திப் பணிக்கும் தடை வராதபடி - தேவன் தேசத்தின் கதவுகளைப் பூட்டுவதற்கு ஒப்புக்கொடுக்காதபடி நாம் ஜெபிக்கவேண்டும். அப்போது இந்தத் தேசத்தின் மேல் சுத்த ஜலம் தெளிக்கப்படும்; இந்தத் தேசம் எழுப்புதல் என்னும் அக்கினியால் சுத்திகரிக்கப்படும் (எசேக். 36:25).

இயேசுவை அறிவிக்கின்றவர்கள் 'கர்த்தரே தெய்வம்' என்று நிரூபிக்கிறவர்களாக மாறும்போது, இந்த மாபெரும் தேசம் வாழ்க்கைப்படும். அப்போது பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார்கள் என்கின்ற தீர்க்கதரிசனம் நிச்சயமாய் நிறைவேறும்! அல்லேலூயா! - ஹரிஸ் பிரேம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு இதயங்கள் பணிகின்றன, இல்லங்கள் திறக்கின்றன.
தளங்களிலும் தாங்குவோர் முனையிலும் விசுவாச சேனைகள் ஏகமாய் எழும்புகின்றன!
அறுவடையின் எஜமானரே ஸ்தோத்திரம்.

## ஒரு இலட்சம் கிராமங்களைப் பணிவிடையாளர்களின் பாதங்கள் எட்டும் வரை தொடரட்டும் தேவ ஜனங்களின் ஒன்றுதிரளுதல்; படரட்டும் பரம இராஜ்யத்தின் நற்செய்தி!



01 Satnami Youth Camp, Tilai, Chhattisgarh – 15-17, May 2024


02 Kurukh Believers Mela, Dangbuda, Chhattisgarh – 17-18, May 2024


03 West Tamilnadu State Meet 2024, Coimbatore – 18-19, May 2024


04 Telangana State Meet 2024, Tiruvalla – 20-22, May 2024


06 Jharkhand – Chhattisgarh State Meet 2024, Siliguri – 23-25, May 2024



07 Ezra Camp, Balangir, Odisha – 29.05.2024

**மாநிலக் கூடுகைகள், மக்களின மேளாக்கள், இளைஞர்களுக்கான ஆத்மாதாயப் பயிற்சிகள், எஸ்றா முகாம்கள் அனைத்திலும் தரிசன விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. முப்பதும் அறுபதும் நூறுமான பலனுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.**


05 Andhra Pradesh State Meet 2024, Tiruvalla – 23-25, May 2024


08 Oraon Believers Mela, Nawatoli, Jharkhand – 05-07 June 2024

"விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்" (1கொரி. 3:7).

# அன்பின் பகிர்வுகள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இமயமலையின் கலிம்போங் எனும் மலை பட்டணத்தின் "பிரஸ்பிடேரியன் சபை"யில், 2024 மே 24 ஞாயிறு காலை ஆராதனையிலும், "இமாலயன் ஃப்ரி சர்ச்" சபையில் மதிய ஆராதனையிலும் தேவச்செய்தியளிக்கும் வாய்ப்புபெற்றேன். 14.02.2017ல் தனி மாவட்டமாக உருவெடுத்த காலிம்பாங்கில் தற்போது 200க்கும் அதிகமான



திருச்சபைகள் இயங்குவதை அறிந்து தேவனைத் துதித்தேன். இங்கு நமக்குத் தள ஊழியமில்லை; இரு முன்னேற்றப் பணி ஊழியர்கள் உண்டு. இங்கு விஷ்வவாணி சேமிப்புப்பெட்டியாளர்கள் அநேகர் உண்டு. அந்த ஆராதனையிலும் அநேகர் ஆர்வமுடன் சேமிப்புப் பெட்டி பெற்றுச் சென்றனர். இம்மலையில் நின்றபோது என் சிந்தனை சுமார் 34 ஆண்டுகள் பின்நோக்கிச் சென்றது.

1990ம் ஆண்டுகளில், இந்தியாவிலும், அண்டை நாடுகளிலும் பேசும் மொழிகளில் வானொலி வாயிலாக சுவிசேஷத்தை ஒலிபரப்பும்படி எமில் அண்ணன் அவர்கள் மிகுந்த பிரயாசமெடுத்த நாட்கள் அவை! ஹைதராபாத்தில் இருந்த என்னிடம் எமில் அண்ணன், 'தம்பி, திபெத்திய மொழியில் வானொலிச் செய்தி வழங்கும்படி, நீங்கள் உடனடியாகக் காலிம்பாங்குக்குப் போய், ஒரு திபெத்திய நபரைக் கண்டுபிடியுங்கள் என்றார்கள். நான் ஹைதராபாத்திலிருந்து புவனேஸ்வரம் சென்று, சகோ. மன்னா விட்சன் அவர்களோடு கல்கத்தா வழியாகப் பயணித்து சிலிகுரி சேர்ந்தோம்.

சிலிகுரியில் இறங்கிய பிறகுதான் தெரிந்தது சிலிகுரியிலிருந்து 100 கி. மீ. தூரத்தில் இமயமலை மேலுள்ள பட்டணம் காலிம்பாங் என்று. பேருந்து நிலையத்தில் எங்களை விசித்திரமாகவே பார்த்தார்கள். ஏனெனில், அங்கு ஒரு வார காலமாக கடையடைப்பு போராட்டம்; 'குர்கா லேண்ட்' போராட்ட உச்சகட்டம்; போக்குவரத்து நிறுத்தம்! செய்வ தறியாது திகைத்தவர்களாக, இவ்வளவு தூரம் வந்தபிறகு, பணியை முடிக்காமல் எப்படி திரும்பிப் போவது? எமில் அண்ணனிடம் தெரிவிக்க, எங்கள் அருகில் போன் வசதியும் இல்லை. ஜீப் ஒன்று காலிம்பாங் மலைக்குச் செல்வதை அறிந்து, அதில் ஜன நெருக்கத்தின் நடுவிலும் அமர்ந்து, பயணம் தொடர்ந்தோம். டீஸ்டா நதிக் கரையோர சாலையிலிருந்து பள்ளத்தில் பாயும் நதியைப் பார்த்தால் தலை சுற்றுகிறது; இமய மலையில் 5 மணி நேரத்துக்கும் மேலான மிக கடினமான பயணமது. காலிம்பாங்-ல் இறங்கியதும், சட்டென உடன் பிரயாணிகள் அங்குமிங்கும் பிரிந்து மறைந்தார்கள். ஆட்களோ, கடைகளோ இல்லை; வயிற்றைக் கிள்ளும் பசி களைய குழாய்த் தண்ணீர் தவிர ஏதுமில்லை! கையில் விலாசம் இருந்தும் எங்கள் இருவரையும் நடத்த ஆட்கள் இல்லை. வெறிச்சோடியிருந்த சாலையில் கடுங்குளிரின் நடுவில் நடக்கும் சூழ்நிலை!

சிலிகுரி மலையடிவாரத்தில் இருந்திருந்தால் திரும்பிப்போய் இருக்கலாம்; இப்போதோ சிலிகுரிக்கும் செல்லமுடியாது! சகோ. மன்னா உடன் இருந்தது ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்தது. மாலை நேரம் நெருங்கும்போது, ஓர் இராணுவ வீரர் எங்களிடம் வந்து, ஏன் இப்படிப்பட்ட நேரத்தில் வந்தீர்கள், எங்கே போகவேண்டுமென விசாரித்தார். வேலூரைச் சார்ந்த தமிழ்ச் சகோதரர் அவர். எங்கள் நிலைகண்டு

பரிதாபங் கொண்டு, 'நீங்கள் சொல்லுகிற இடம் வழியாக ஒரு இராணுவ லாரி போகும்; உங்களை அங்கே இறக்கிவிடச் சொல்லுகிறேன்' என்று ஏற்றி அனுப்பி உதவினார்.

சற்றே நிம்மதி பெருமூச்சுடன் இறங்கி, குறிப்பிட்ட விலாசத்தைத் தேடி கதவைத் தட்டினோம். கலவர நாட்களாக இருந்ததால் கதவு திறக்கப்படவில்லை. நாங்களும் போகுமிடமின்றி, அங்கேயே நின்றோம். மெதுவாக கதவைத் திறந்து ஒருவர் பார்த்தார்; பிறகு உள்ளே அழைத்தார். அவர்தான் அருள்திரு. பீட்டர் ராப்கே. பல வருடங்களாக வேத புஸ்தகத்தைத் திபெத்திய மொழியில் மொழிபெயர்த்துவந்த அந்த தேவ மனிதர், கையினால் வேத புஸ்தகத்தை திபெத்திய மொழியில் எழுதிக்கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததில் கர்த்தருக்குள் பெரும் சந்தோஷம்! சூடாக தேநீர் கொடுத்து, நூடுல்ஸ் பரிமாறினார். அவரது வீட்டிலிருந்து சற்று தூரத்தில் சி.என்.ஐ. திருச்சபையின் விருந்தினர் அறையில் எங்களைத் தங்கவைத்தார். காலையிலே நிர்கதியான நிலை; இரவிலே துதியின் ஆர்ப்பரிப்பு! ஆம், அந்த இரவில் தேவனின் அற்புத வழிநடத்துதலை நினைத்துத் துதித்தோம். தேவ பணியில் அவரைச் சார்ந்து விசுவாசத்தோடு முன்சென்றதால், அற்புதமாகவே அந்நாளில் வழிநடத்தினார்; அவர் இன்றும் அவ்விதமாக வழிநடத்துவார்.

மறுநாள் காலையிலே வந்த அருள்திரு. பீட்டர் அவர்களிடம், திபெத்திய ஜனங்களுக்கு திபெத்திய மொழியில் விஷ்வவாணியின் வானொலி ஒலிபரப்பு மூலம் இயேசுவை அறிவிப்பதைக் கூறியபோது அதிக மகிழ்ச்சியுடன், 'எனது விருப்பமும் வாஞ்சையும் அதுதான்; இன்னொரு தேவ மனிதனை நாளை உங்களுக்கு அறிமுகம்செய்வேன்; வானொலியின் மூலம் தேவ வார்த்தை செல்ல அவர் அதிபயனுள்ள நபராக இருப்பார்' என்றார். அடுத்த நாள் அருகிலிருந்த மலையில் எங்களை ஏற்றி, பள்ளத்தாக்குகளில் இறக்கி, சில மண்வெட்டுப் படிக்கட்டுகளில் அழைத்துச்சென்றார். எங்களுக்குச் சற்றும் பழக்கமில்லா கடினமான நடை பாதை அது! ஆனால் மிக எளிதாக எங்கள் முன் தாவிச் சென்ற போதகரது நடை எங்களையும் உற்சாகமாக நடக்கவைத்தது.

முன்னறிவிப்பு கொடுத்துச்செல்ல தொலைத்தொடர்பு சாதனமில்லா அந்நாளில், உயர்மலையின் மறுகரையில் செழிப்பான பெரியதொரு பள்ளத்தாக்கிலிருந்த வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். மிகப் பெரிய அவ்வீட்டின் அருகில் சிறுவர் இல்லம், அதனுள் அநேகச் சிறுவர்கள்! அவ்வீட்டில் அருள்திரு. தாச்சன் எனும் தேவ மனிதரைச் சந்தித்து, வானொலிச் செய்தியாளர் தேவை என்றதும், மகிழ்வுடன் பொறுப்பேற்றார். சாது சுந்தர்சிங் என்ற பரிசுத்தவானோடு இமயமலைப்பகுதியில் அவரது தகப்பனார் பணிபுரிந்ததை விவரித்தார். சரியான தேவ ஊழியரிடத்தில் எங்களைக் கொண்டுவந்த தேவனைத் துதித்தோம். இச்சந்தோஷ செய்தியை எமில் அண்ணனுக்கு அறிவிக்க விருப்பம்தான்; சிலிகுரிக்குச் சென்றால் மட்டுமே டிரங்க் கால் புக்கிங் செய்யமுடியும்!

அருள்திரு. பீட்டர் அவர்களுக்கும் நன்றிகூறிவிட்டு, சிலிகுரி செல்லப் புறப்பட்டபோது தான் அறிந்தோம் மலைச்சரிவு காரணமாக சாலை மூடப்பட்டுவிட்டது என்று. மண், கல் கலந்த இமயமலையில், மழைகால மலைச்சரிவு சகஜமே. ஆபத்து நிறைந்த அவ்விடத்தினின்று இறங்க வழியில்லை. சில நாட்கள் அங்கேயே தங்கினோம். மலை, பள்ளத்தாக்கு, நீரோடைகள், நெருக்கமான வீடுதோறும் நிறைந்த வண்ண வண்ணச் செடிகள், பூக்கள் யாவும் கண்களுக்கு மனரம்மியக் காட்சிகள்! மொழி தெரியாததால் மக்களுடன் சரளமாக பேச இயலவில்லை. ஆனால் எதற்காக அங்கே ஏறினோமோ, அவ்வேலையைச் செய்துமுடிக்கத் தேவன் அந்நாட்களில் உதவினார்.

மேலும் இமயமலைப்பகுதியில் தேவன் நடத்திய பாதையை வரும் இதழில் தொடரலாம்.

ஹைதராபாத்
12.06.2024

கர்த்தரின் பணியில்
P. செல்வராஜ் Chairman, Vishwa Vani Network

# தேவ ஜனம் எனும் உரிமை, தேவ சேனை எனும் பொறுப்பு!

- Rev. Dr. S. இம்மானுவேல் ஞானராஜ், இயக்குநர் - ஜெப ஒருங்கிணைப்பு

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

எமில் அண்ணன் எழுதிய விலைமதியாத பாடல்களில் மிகவும் எளிமையான ஆனால் சிறப்பான ஒரு பாடல் 'இயேசுவை ஏற்றுக்கொள்வேன்' என்ற இந்தப் பாடல் ஆகும்.

இயேசுவை ஏற்றுக்கொள்வேன் – நான் (4)
உலகத்தை அல்ல, மனிதரை அல்ல,
என்னை ஏய்த்து மோசம்போக்கும் பிசாசையும் அல்ல (2)
இயேசுவை ஏற்றுக்கொள்வேன் – நான் (2)
அதன் சந்தோஷத்தைக் கூறக்கூடுமோ – என்னால் (3)

இயேசுவைப் பின்பற்றுவேன் ... இயேசுவைப் பிரசங்கிப்பேன் ...

ஆம், இயேசுவை ஏற்றுக்கொள்வதினால், பின்பற்றுவதினால், மற்றும் பிரசங்கிப்பதனால் வரும் சந்தோஷத்தை வர்ணிக்கமுடியாது, ஏன் தெரியுமா? அவரை ஏற்றுக்கொள்ளும்போது, மனிதனுக்குக் கிடைக்கும் பாவமன்னிப்பின் நிச்சயம், சமாதானம், சந்தோஷம், இவை எல்லாவற்றிற்கும் மேலாக நமக்குக் கிடைப்பது பரலோக ராஜ்யத்தில் பிறப்புரிமை மற்றும் குடியுரிமை. அந்தக் குடியுரிமை, பிறப்புரிமையின் மகத்துவத்தை அறிந்துகொள்வது நல்லது. அதுமட்டுமல்ல, இயேசுவைப் பிரசங்கிப்பதனால் வரும் சந்தோஷம் மிகப்பெரியது. அதற்குக் காரணம் மனந்திரும்பும் ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் உண்டாகும் சந்தோஷமே.

இயேசுவை ஏற்றுக்கொள்ளுகிறவன் தேவனுடைய பிள்ளையாகிறான். இந்த நற்செய்தியைப் பறைசாற்றுகிறவன் தேவனுடைய போர்வீரனாகிவிடுகிறான். இதைச் சற்று சிந்திப்போமா?

### 1. நீ தேவனுடைய பிள்ளையா?

#### பிறப்புரிமை:

1890ம் ஆண்டு பால கங்காதர திலக் எனும் வழக்கறிஞர், Swaraj–சுயாட்சி என்ற வார்த்தையை உச்சரித்தார். அந்த வார்த்தை இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின் குறிக்கோளுரையாக அதாவது முழக்கமாக மாறிற்று. அந்தப் பதம் எங்கிருந்து தோன்றியது தெரியுமா? 'பிறப்புரிமை – Brith Right' மற்றும் குடியுரிமை என்ற பதங்களின் விளக்கத்திலிருந்துதான். அமெரிக்க நாட்டுச் சட்டத்தின்படி அங்கு பிறக்கின்ற எந்த ஒரு குழந்தைக்கும் குடிமகன், குடிமகள் என்ற உரிமை பிறப்புரிமையாக வழங்கப்படுகிறது. இந்திய தேசத்தில் அந்தச் சட்டம் வெளிநாட்டவர்க்கு சில மாற்றங்களைக் கொண்டிருந்தாலும் ஒரு குழந்தையின் தாய், தகப்பன் இருவரும் இந்தியர்கள் என்னும் பட்சத்தில் அதற்கு மறுக்கமுடியாத பூரண குடியுரிமை பிறப்புரிமையாகும்.

குடியுரிமை என்பது பேசும் சுதந்திரம், ஆயுதமின்றி சமாதானமாகக் கூட்டம்போடும் உரிமை, கழகங்கள் மற்றும் கூட்டமைப்புகள் அமைக்கும் உரிமை – இவற்றை உள்ளடக்கியதாகும். மேலும் இந்திய தேசத்தின் எந்தவொரு பகுதியிலும் சொந்தமாகக் குடியிருக்கும் உரிமை உள்ளதாகும். இந்தக் குடியுரிமைச் சட்டம் 57 / 1955 என்ற எண்ணுடன் 1955ம் ஆண்டு டிசம்பர் 30ல் அமலாக்கப்பட்டதாகும். இந்தக் குடியுரிமை வெளிநாடுகளில் உங்களுக்குத் தரும் சுதந்தரம் மற்றும் பாதுகாப்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள உங்களுடைய பாஸ்போட்டின் (கடவு சீட்டின்) முதல் பக்கத்தைப் பாருங்கள். அங்கு இவ்வாறு எழுதப்பட்டு உள்ளது: இந்திய குடியரசின் ஜனாதிபதியின்

பெயரால் இது சம்பந்தப்பட்ட யாவருக்கும் எதிர்பார்ப்பாகவும், விண்ணப்பமாகவும் வைக்கப்படுவது யாதெனில் இதை வைத்திருப்பவரை முழு சுதந்திரமாக எந்த தங்கு தடையின்றி அநுமதிக்கவும், அவருக்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் பாதுகாப்பையும் வழங்கவேண்டும் என்பது. - இந்தியக் குடியரசின் ஜனாதிபதியின் ஆணைப்படி. ஒவ்வொரு இந்திய தேசத்துக் குடிமகனுக்கும் இந்தச் சுதந்திரம் - இந்த உரிமை பிறப்புரிமையில் கொடுக்கப்பட்டுள்ளது என்பது எத்தனை சிறப்பான ஒன்று.

### பரலோகக் குடியுரிமை:

இந்தப் பூவுலகில் குடியுரிமையும் சுதந்திரமும் பிறப்புரிமையினால் வருமாயின், மரணத்திற்குப் பின் மனிதன் செல்லவேண்டிய மறுமையில் அதாவது கடவுளுடைய ராஜ்ஜியத்தில் குடியுரிமை பெற்றுக்கொள்வதும் ஒரு பிறப்புரிமையினால் வரும். அதைத்தான் நம் ஆண்டவர் இயேசு நிக்கொதேமு எனும் ஒரு யூத அதிகாரியினிடத்தில் விளக்கமாகக் கூறுகிறார். இதை யோவான் 3:1-21 வசனங்களில் வாசிக்கிறோம். அவரிடத்தில் இயேசு, "நீ மறுபடியும் பிறக்கவேண்டும்" என்கிறார். அது எப்படிச் சாத்தியமாகும் என்று கேட்டவருக்கு, இயேசு பதிலாக, ஒருவன் சரீரத்தில் பிறப்பது மட்டும் போதாது, ஆவியிலும் பிறக்கவேண்டும்; அதாவது, உள்ளான மனிதனில் பிறக்கவேண்டும் என்று விவரித்துக் கூறுவதை 5-6ம் வசனங்களில் காணலாம்.

எப்படி ஆவியில் பிறக்கமுடியும் எனும் கேள்விக்கு, சர்வலோகத்தின் பாவத்திற்காக சிலுவையில் பலியாக உயர்த்தப்பட்ட தேவகுமாரனை விசுவாசிக்க வேண்டும் என்று இயேசு பதிலளிக்கிறார் (யோவான் 3:16). இன்னும் இதை விளங்கிக்கொள்ள யோவான் 1:12ஐப் படிக்கவேண்டும். இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். இதுதான் அந்த மறுபிறப்பின் மூலம் நமக்குக் கிட்டும் பரலோக கடவுச்சீட்டு அல்லது குடியுரிமைச் சான்று. இதைப் பெற்றவர்க்கு மரண பயம் - தண்டனை குறித்த பயம் - நரக பயம் கிடையாது. ஏனென்றால் யோவான் 5:24ல் இயேசுவை ஏற்றுக்கொண்டால், நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறான் என்று இயேசு தெளிவாகக் கூறுகிறார். நீ தேவனுடைய பிள்ளை என்ற உரிமையைப் பெற்றுவிட்டாயா? அந்தச் சந்தோஷத்தை அநுபவிக்கிறாயா?

### 2. நீ தேவனுடைய போர்வீரனா?

ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் இரு பக்கங்கள் உண்டு. ஒன்று உரிமை, இரண்டாவது பொறுப்பு. ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் தேவனுடைய பிள்ளை என்ற உரிமையுடன் ஒரு கடமையும் உண்டு. அது என்ன? மத்தேயு 21:28-30ஐ பாருங்கள். 'மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்' என்பது ஒரு தகப்பனின் குரல். மனமுவந்து அவருடைய பணிசெய்வது மகனுடைய கடமை. "நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15) என்பது இயேசுவின் கட்டளை. தேவனுடைய பிள்ளையாக தேவ இராஜ்யத்தைக் கட்ட களமிறங்குவது கடமை. "சுவிசேஷத்தை அறிவிப்பது என்மேல் விழுந்த கடமை" என்ற பவுல், "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" என்கிறார் (1 கொரி. 9:16). வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றழைக்கும் இயேசு என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்றும் கூறுகிறார். (மத். 11:28, 29)

இயேசுவின் பாதத்தில் பாவ பாரத்தை இறக்கி வைத்தால் வாழ்வில் இளைப்பாறுதல்.

ஆனால் இயேசுவின் பாரத்தைத் தோள்மீது சுமந்தால் அது ஆத்துமாவிற்கு, அதாவது உள்ளான மனிதனுக்கு நிம்மதி தரும். சுவிசேஷம் அறிவிக்கப் பொறுப்பேற்றால் வாழ்க்கை வாழ்ந்து விட்டோம் என்ற நிம்மதி, சந்தோஷம் கிடைக்கும். ஒரு பாவி இரட்சிக்கப்படும்போது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக்கா 15:7). சுவிசேஷத்தை அறிவிப்பது பரலோகத்தை மகிழ்விக்குமானால் அறிவிக்கும் பணியில் ஈடுபடும் உனக்கு எவ்வளவு சந்தோஷம் தரும்!

தேவனுடைய பிள்ளையாக அவர் தரும் ஆசீர்வாதங்களை அனுபவிப்பது மட்டுமல்ல, அவருடைய சத்துருவாகிய பிசாசை எதிர்த்துப் போராடுவதும் நம்மேல் விழுந்த கடமையல்லவா! இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசு மனக் கண்களைக் குருடாக்கி வைத்திருக்கும்போது (2 கொரி. 4:4) அவர்களை இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திருப்பும்படி (அப். 26:18) பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்தகார சக்திக்கு எதிராகப் போராட தங்களை அர்ப்பணிப்பவர்களே தேவ சேனையாக எழும்புவார்கள். எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித்திரியும் நம் எதிராளியான பிசாசானவனை (1 பேதுரு 5:8) எதிர்த்துப்போராட நாம் தீவிரம் கொள்ள வேண்டாமா?

நம்மைச் சுற்றி அந்தகாரத்தில் வாழும் மக்கள், வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாதவர்களாக பாவத்தில் வாழ்கிறார்களே, அவர்களுக்குப் பரிசுத்த மார்க்கத்தைக் காட்டுவதும் பாவ மன்னிப்பின் சுவிசேஷத்தைக் கூறியறிவிப்பதும் நம்மேல் விழுந்த கடமை அல்லவா. ஆதலால் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 6:11-18).

தேவனுடைய போர்வீரன் என்னும் உணர்வினைப் பெற்றுவிட்டாயா? அந்த சந்தோஷத்தை அனுபவிக்கிறாயா? ■

# கர்த்தராலேயே ஆயிற்று

தளங்களில் தேவனால் உருவாகும் விசுவாசிகள் – உதயமாகும் சபைகளுக்கு ஆலயக் கட்டடங்களைக் கொடுக்கும் மனவிருப்பத்தை எங்கள் குடும்பத்திற்குக் கொடுத்த தேவன்தாமே அந்த நல்விருப்பத்தை தமது மகிமைக்காக நிறைவேற்றிவருகின்றார்.

சத்தீஸ்கடு மாநிலம், கோர்பா மாவட்டத்தின் பட்டாடி பணித்தளத்தில் இயேசுவின் மகிமைக்காக – சத்னாமி விசுவாசிகள் கூடி தேவனைத் தொழுதுகொள்வதற்குத் தேவாலயம் ஒன்றை 2024 மார்ச் 10 அன்று பிரதிஷ்டை செய்தோம். “அது கர்த்தராலேயே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரிய மாயிருக்கிறது” (சங். 118: 23).




ஆம், 5வது ஆலயமாக தளங்களில் தேவன் எங்கள் மூலம் எழுப்பியிருக்கும் பட்டாடி ஆலயத்தை நேரில் கண்டோம். தேசத்தில் தேவ நாமத்தை உயர்த்தும் அத்யாவசியப் பணியில் எங்களது பங்குக்குப் பரலோக தேவன் பலன் அருளுவது எங்கள் இதயங்களில் மிகுந்த களிகூருதலைத் தருகின்றது. இயேசுவுக்கு ஸ்தோத்திரம்.

– சாம்சன் ரவிச்சந்திரன் குடும்பத்தினர், சென்னை



# பணித்தளச் செய்திகள்
## ஸ்தோத்திரமும் வேண்டுதலும்

**கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக; என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக.**
**சங்கீதம் 18:46**

### 01 ஜம்மு காஷ்மீர் — பணித்தளங்கள்: 40

கர்த்தரின் பணிக்கு எதிராய்ச் செயல்பட்ட கலாராம் கல்வாரி அன்பிற்குச் சரணடைந்தார். 5 பேர் தங்கள் புதிய விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கை செய்தனர். புத்வானியில் 4 குடும்பங்கள் நற்செய்தியினால் புதுவாழ்வுபெற்றன. ராம்பால் என்பாரின் மனமாற்றத்தினால் சதர்கோட் பகுதி ஊழியங்களில் புதிய தொடர்புகளைத் தேவன் தருகிறார், துதியுங்கள்.

சாலை விபத்தில் தலைக் காயமுற்ற ஊழியர் மோகன்லாலின் மனைவி ரஜினிக்கு இயேசுவின் தொடுதல் தேவை. உப்பர் லாலி ஆராதனைக் குழுவிற்கு இடையூறு விளைவிப்போர் இருதயங்களில் கர்த்தர் கிரியைசெய்ய... காஷ்மீரில் தளங்கள் திறப்பதில் பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலுக்காக... முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்துள்ள 8 இளைஞர்களை வளாகப்பயிற்சியில் இணைக்கும் முயற்சிகளுக்காக ஜெபியுங்கள்.

### 02 இமாச்சலப் பிரதேசம் — பணித்தளங்கள்: 42

பாங்ரான் பணித்தள ஆலயக் கட்டுமானப் பணிகள் தேவ தயவால் நிறைவடைந்தது. தேடுவோர் கூட்டங்களை நடத்திய ஊழியர்கள் 150 கிராமங்களில் திறந்தவாசல் கண்டுள்ளனர். ஊழியர் அங்கித் குமார் குடும்பத்தைத் தேவன் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதித்தார். கிறிஸ்துவை இரட்சகராக அங்கீகரித்த 12 பேர் விசுவாச அறிக்கையினால் தேவனுக்கு மகிமை சேர்த்தனர், துதியுங்கள்.

கீனா விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்த 4 புதிய குடும்பங்களும் தேவ வசனங்களில் திடப்பட... தள ஊழியங்கள் தொடரும் 223 கிராமங்களிலும் கர்த்தருடைய ஆவியானவர் பலத்த கிரியைசெய்ய... டோலே பகுதியில் காணப்படும் ஊழியத் தடைகளைத் தேவன் அகற்ற... விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்த வகுப்புகளில் 725 பேர் பங்கெடுக்கின்றனர், ஜெபியுங்கள்.

## 03 பஞ்சாப் பணித்தளங்கள்: 51

வாலிபர் முகாமில் 18 பேர் தங்கள் வருங்காலங்களை இயேசுவுக்குத் தத்தம் செய்துள்ளனர். கிறிஸ்து இயேசுவைத் தங்கள் இரட்சகராக அறிக்கை செய்திருக்கும் 35 ஆத்துமாக்கள் தளச் சபைகளில் இணைந்துள்ளனர். ஊழியர் பல்ஜிந்தர் - சுமர் தம்பதியரைத் தேவன் குழந்தைப் பாக்கியத்தினால் ஆசீர்வதித்தார். 40 கிராமங்களில் நிறைவடைந்த இரவுக்கூட்டங்கள் மூலம் ஊழியத் தொடர்புகள் அதிகரித்தது துதியுங்கள்.

முழுநேரப் பணிக்குத் தங்களைச் சமர்ப்பித்துள்ள 20 இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்கப்பட... விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்தங்கள் 15 கிராமங்களில் இடம்பெறுகிறது. குருதாஸ்பூர், பத்தின்டா மாவட்டங்களின் உள்ளான கிராமங்களில் தளங்கள் திறக்க ஆய்வுப்பணிகள் நடைபெறுகிறது. 5 பணித்தளங்களில் கட்டப்பட்ட ஆலயங்களுக்கு வளாகச் சுவர் அமைக்கப்பட ஜெபியுங்கள்.

## 04 உத்தராகாண்ட பணித்தளங்கள்: 40

தொய்வாலா தளத்தின் மருத்துவ முகாம் 60 வியாதியஸ்தர்களுக்குப் பயனளித்தது. தேடுவோர் முகாம்களில் 52 பேருக்கு இயேசுவின் நாமத்தில் மறுபிறப்பின் அனுபவம் சொந்தமானது. சுவிசேஷ ஊழியத்தின் பயனாக முதன்முறையாக 152 பேர் நித்திய ஜீவனைக் குறித்து அறிந்தனர். வேத வசனங்களுக்குச் செவிசாய்த்த மகேஷ், மதுபானங்களைவிட்டு மனந்திரும்பினார். பிரதீத் நகர் ஆலயத்தின் மறுசீரமைப்புப் பணிகள் துவங்கியது, துதியுங்கள்.

5 பணி மையங்களில் சமுதாய மேம்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட... தேவ பணிக்கு விரோதமாய் எழும்பும் பவுன்சிங் கர்த்தரால் தொடப்பட... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 17 பேருக்காக... புதிய கிராமங்களை ஊழியம் துவங்க காடிமா பிராந்தியத்தில் தொடரும் ஆய்வுப்பணிகளில் தேவ நடத்துதலுக்காக ஜெபியுங்கள்.

## 05 ஹரியானா பணித்தளங்கள்: 20

தண்ட் தளத்தின் இளைஞர் முகாமில் 8 பேர் தங்கள் வருங்காலங்களை இயேசுவுக்கு ஒப்புவித்துள்ளனர். இயேசுவின் நாமத்தில் சுகமடைந்த அர்ஜுன், ஆஷா ஆகியோர் சுவிசேஷத்திற்குச் சாட்சிபகருகின்றனர். சேர்காட் பணித்தளத்தில் 8 பேர் தங்கள் புதிய விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டனர். அம்பாலா, பல்வால் மாவட்டங்களில் வேத வசனங்கள் செல்லும்படியான திறந்த வாசலைக் காண்கிறோம், ஸ்தோத்திரம்.

4 இடங்களில் தெபோராள் முகாம்கள் நடத்தும் பிரயாசங்களுக்காக... ஜனச்சோலி தளத்தில் நடந்த மருத்துவ முகாமின் பின்தொடர் பணிகளுக்காக... போர்யகேராவில் விதைக்கப்பட்ட வசனங்கள் வாலிபர் உள்ளங்களில் கிரியைசெய்ய... கேய்தல், குருக்ஷேத்திரா மாவட்டத் தளங்களிலிருந்து முழுநேர ஊழியர்களைத் தேவன் எழுப்பித் தர ஜெபியுங்கள்.

## 06 இராஜஸ்தான் – பான்ஸ்வாடா பிராந்தியம் பணித்தளங்கள்: 42

ஜோக்திமால் தளத்தில் ஜெயந்தி லால் வீட்டாரனைவரும் கர்த்தரையே சேவிக்க முன்வந்துள்ளனர். பக்கவாதத்திலிருந்து பூரண சுகம்பெற்ற மாங்கிலால் மூலம் கோராபாடாவில் இயேசுவின் நாமம் மகிமைப்படுகிறது. கிறிஸ்துவில் புதுவாழ்வுபெற்ற 7 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். கிகபாடா, படோலி ஆகிய இடங்களில் தேவனருளும் புதிய ஊழியத் தொடர்புகளுக்காக ஸ்தோத்திரம்.

பாகிடோரா தாலுகாவிலிருந்து முழுநேர ஊழியர்களைத் தேவன் எழுப்பித்தர... ஐந்து வருடங்களாகக் குழந்தைப் பாக்கியத்திற்குக் காத்திருக்கும் மனோஜ்-சுனிதா குடும்பத்திற்காக... மோட்டியா கிராமத்தில் மதுபானங்களுக்கு அடிமையாயுள்ள குடும்பங்களின் மீட்புக்காக... சாலை விபத்தில் கால் எலும்புகள் முறிவடைந்த லட்ஜி தாமோர் தேவனால் பூரண சுகம்பெற ஜெபியுங்கள்.

## 07 இராஜஸ்தான் – உதய்பூர் பிராந்தியம் — பணித்தளங்கள்: 36

கிறிஸ்து இயேசுவின் நாமத்தை அறிக்கைசெய்த 7 பேர் ஆராதனைக் குழுவில் இணைந்துள்ளனர். கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதிக்கப்பட்ட பிரபுலால் குடும்பம் கர்த்தருக்குச் சாட்சி பகருகின்றது. தேடுவோர் கூட்டங்களில் இயேசுவை அறிந்த 25 பேர் வேதபாட வகுப்புகளில் புதிதாகப் பங்கெடுக்கின்றனர். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேவிலால், ராஜூடி மூலம் முழுக் குடும்பமும் இயேசுவை அறிவதில் ஆர்வங்கொண்டுள்ளன, துதியுங்கள்.

கோட்ரா, பனர்வாவில் ஆராதனைக் குழு துவங்கும் முயற்சி பலன் தர… நற்செய்தி கேட்ட அம்பாதாரா கிராம ஜனங்களின் இருதயங்களில் கர்த்தர் கிரியைசெய்ய… 9 வருடங்களாகக் கர்ப்பத்தின் கனிக்காகக் காத்திருக்கும் லீலா குடும்பத்திற்காக… ஜாக்டா தளச் சபையாரின் சுவிசேஷப் பணியினால் அண்டை கிராமங்கள் வசன வெளிச்சம் பெற ஜெபியுங்கள்.

## 08 உத்தரப் பிரதேசம் — பணித்தளங்கள்: 96

பணித்தள ஆய்வின் மூலம் 45 கிராமங்கள் ஊழியம் துவங்குவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டன. சந்தோலி ஜில்லாவில் வேதபாட வகுப்புகள் 5 இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சந்தீப் குமார் எனும் புதிய விசுவாசியின் இல்லம் ஆராதனைக் கூடமானது. முஷானி, ராஜாபூரில் வேத வசனங்கள் செல்லும் அநுகூல வாசலைத் தேவன் திறந்தார், துதியுங்கள்.

விசுவாசிகள் ஐக்கியத்தில் புதிதாய் இணைந்த 45 குடும்பங்களும் கர்த்தரைப் பற்றும் அறிவில் வளர… 156 கிராமங்களில் நிறைவடைந்த தேடுவோர் முகாம்களின் பின்தொடர் பணிகளுக்காக… சமுதாய நல்வாழ்வு மையங்கள் 23 இடங்களில் துவங்கும் பிரயாசங்களுக்காக… காசநோயுடைய மோகன் குப்தாவுக்கு இயேசுவின் தொடுதல் தேவை, ஜெபியுங்கள்.

## 09 பீஹார் — பணித்தளங்கள்: 35

208 கிராமங்களில் தேடுவோர் கூடுகைகள் நிறைவடைந்தன; ஜீவ வசனங்கேட்ட 2288 பேரில் 205 பேர் கிறிஸ்துவுக்கு இதயம் திறந்துள்ளனர். ரூபாஸ்பூரில் இடம்பெற்ற சிறுவர் ஊழியத்தினால் 150 இளஞ்சிறார்கள் பயனடைந்தனர். 10 பேர் தங்கள் புதுவாழ்வைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்துள்ளனர். புரார், சரன் பகுதிகளில் 50 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன, துதியுங்கள்.

பொதுத்தேர்வு எழுதி, முதல் நிலையில் தேர்ச்சியடைந்த தள விசுவாசிகளின் பிள்ளைகள் 80 பேரின் மேற்படிப்புகளில் தேவ நடத்துதலுக்காக… ஆலயக் கட்டுமானத்திற்காக ஆயத்தம்செய்துள்ள 4 நிலங்களின் பதிவுப்பணிகள், மற்றும் கட்டட அனுமதி ஆவணங்கள் கிடைக்க… 175 ஆராதனைக் குழுக்களில் நிறைவடைந்த விசுவாசப் பெருவிழாக்கள் மூலம் விசுவாசிகள் ஆவிக்குரிய வளர்ச்சியடைய… முழுநேர ஊழியம் செய்ய 20 இளைஞர்கள் விண்ணப்பித்திருக்கின்றனர், ஜெபியுங்கள்.

## 10 ஜார்க்கண்டு — பணித்தளங்கள்: 60

பூது தளத்தில் முதன்முறையாய்ச் சுவிசேஷம் கேட்ட 19 பேர் வசனங்களைக் கேட்பதில் மனோவாஞ்சைகொண்டுள்ளனர். 22 பேர் தங்கள் புதிய விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர். முதல் தலைமுறை விசுவாசக் குடும்பங்களின் 4 திருமண ஆராதனைகள் நம் தளச் சபைகளில் நடத்தி வைக்கப்பட்டது; நற்செய்தி தரும் சமுதாய முன்னேற்றத்திற்காக ஸ்தோத்திரம்.

ஹர்தோலி, துமரியாவில் சுவிசேஷம் கேட்டோர் உள்ளங்கள் கிறிஸ்துவில் மறுரூபமாக… பனாரி பணித்தளத்தில் எதிர்ப்பு தெரிவிக்கும் 5 குடும்பங்களைக் கர்த்தர்

சந்திப்பாராக... நவடோலியில் நிறைவடைந்த குடுக் மேளாவின் பின்தொடர் பணிகளுக்காக... "நூறு எஸ்றாக்கள் - ஐந்நூறு கிராமங்கள்" எனும் பணித் திட்டத்தைத் தேவன் வாய்க்கப்பண்ணுவாராக, ஜெபியுங்கள்.

**11 மேற்கு வங்காளம் – கூச்பிஹார் மாவட்டம்** **பணித்தளங்கள்: 6**

பாவ அறிக்கைசெய்த 5 பேர் இயேசுவில் தங்கள் புதிய விசுவாசத்தையும் அறிக்கை யிட்டனர். சால்துராவில் இடம்பெற்ற தேடுவோர் கூடுகை 16 உள்ளங்களுக்குத் தேவ ஆறுதல் அளித்தது. பிசாசின் பிடியிலிருந்த ஹிராமுனி ஜெபத்தினால் சர்வாங்க விடுதலை பெற்றார். கை, கால்கள் செயலற்றுப்போன பீஹம் மாலி இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கிறார், துதியுங்கள்.

சிறுசிறு கொப்பளங்களால் சரீரம் முழுவதும் பாதிக்கப்பட்ட மங்கள்சன் சுகம்பெற... உத்தர் தல்கோர் தளத்தில் ஆலயம் கட்டும் பிரயாசங்களில் கர்த்தரின் நடத்துதலுக்காக... சுவிசேஷ ஊழியங்களுக்கும் தேவ பிள்ளைகளுக்கும் இன்னல்கள் விளைவிக்கும் ஹரிநாத் மனந்திரும்ப... பிரேமர்தங்காவில் வசனங்களைக் கேட்ட 15 ஆத்துமாக்களும் இரட்சிக்கப்பட... ஜெபியுங்கள்.

**12 மேற்கு வங்காளம் – டார்ஜிலிங் மாவட்டம்** **பணித்தளங்கள்: 20**

புதிய விசுவாசி பிஷால் ஒராவன் மூலம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. தேடுவோர் கூடுகையில் பாவ அறிக்கை செய்த 6 பேர் விசுவாசிகள் ஐக்கியத்தில் பங்கேற்கின்றனர். திறந்தவெளிப் பிரசங்கங்கள் வாயிலாக 28 ஆத்துமாக்கள் இயேசுவுக்குச் சொந்தமாயின. மருத்துவ முகாமின் பலனாக ஃபேக்டரி லைன் எனுமிடத்தில் 35 பேருக்குப் பலன் கிட்டியது, துதியுங்கள்.

விஸ்திஜோட்டி கிராமத்தினர் மனந்திரும்பி நற்செய்தி பணியில் பங்கெடுக்க... பாய்ராகி, பெத்கி ஆகிய பிராந்தியங்களின் வாலிபர்கள் தங்களை முழுநேரப் பணிக்கு அர்ப்பணிக்க... ஹிமுல்டைரி தள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... விசுவாசிகள் அதிகரிக்கும் கோஷ்புகூர் ஆலய விரிவாக்கப் பணிக்காக ஜெபியுங்கள்.

**13 மேற்கு வங்காளம் – எத்தில்பாரி பிராந்தியம்.** **பணித்தளங்கள்: 30**

கிறிஸ்து இயேசுவில் புதுமனம்பெற்ற 7 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். நந்தா லைன் தளத்தின் தெபோராள் முகாம் 200 சகோதரிகளுக்குப் பயனளித்தது. எத்தில்பாரி பிராந்தியத்தின் வேதபாட வகுப்புகளின் எண்ணிக்கை 36ஆக உயர்ந்துள்ளது. வியாதிப்படுக்கையிலிருந்து ஜெபத்தினால் எழுந்த சிர்கே ஒராவன் இயேசுவுக்குச் சாட்சிபகருகிறார், துதியுங்கள்.

ஜார்பீர் பாரா, ஹரிநாத்பூரில் சுவிசேஷ வேலைக்கான திறந்த வாசல்களைத் தேவன் தர... வசன தாகம் நிறைந்த 15 கிராமங்களுக்குப் புதிய ஊழியர்கள் அனுப்பப்பட... மனநோயுடன் அவதியுறும் சீலா ஒராவன் சுகம்பெற... 4 பணித்தளங்களில் ஆலயக் கட்டுமானத்திற்கான அனுமதி கிடைக்கக் காத்திருக்கிறோம், ஜெபியுங்கள்.

**14 மேற்கு வங்காளம் – கொல்கத்தா பிராந்தியம்** **பணித்தளங்கள்: 34**

நாகப் பாம்பினால் தீண்டப்பட்ட ஊழியர் சியாமல் துடுவின் மகள் சலோமியைத் தேவன் சுகப்படுத்தினார். ராய்னா தளத்தின் வேனிற்கால வேதாகமப் பள்ளி 54 சிறுவர்களுக்குப் பயனளித்தது. கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை 8 பேர் அறிக்கைசெய்தனர். பக்கவாதத்தினால் வலப் பக்க உறுப்புகள் செயலிழந்த நிலையில் இருந்த காஞ்சனி பாரூரி இயேசுவில் சுகம்பெற்றார், துதியுங்கள்.

57 கிராமங்களில் நடத்தப்பட்ட தேடுவோர் முகாம்களின் பின்தொடர் ஊழியங்களுக் காக... 6 மாவட்டங்களில் 23 பணித்தளங்களில் நிறைவடைந்த வேனிற்கால வேதாகமப் பள்ளிகளில் பங்கேற்ற இளஞ்சிறார்களின் வருங்காலங்களுக்காக...

10 வருடங்களாகக் கர்ப்பத்தின் கனிக்காகக் காத்திருக்கும் சுகுமார் – பிரதிமா ஹன்ஸ்தா தம்பதியருக்காக... காரிபாரியில் அறிவிக்கப்பட்ட தேவ வசனங்கள் புதிய ஆத்துமாக்களைத் தேவனுக்குச் சொந்தமாக்க... ஜெபியுங்கள்.

## 15 சிக்கிம் பணித்தளங்கள்: 19

5 கிராமங்களில் வேதபாட வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. கம்போல், துமின் தளங்களில் வசிக்கும் லெப்சா ஜனங்கள் சுவிசேஷம் கேட்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். ஜோர்தாங் எனுமிடத்தில் நடத்தப்பட்ட ஆத்மாதாயப் பயிற்சியில் 19 இளைஞர்கள் பங்கேற்றனர். தேவ வசனங்களுக்குச் செவிசாய்த்த 277 பேரில் 33 பேர் இயேசுவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தப்படுகின்றனர், துதியுங்கள்.

புதிய விசுவாசிகளான சஞ்சய் லெப்சா குடும்பத்தினர் தங்கள் சாட்சியினால் அநேகரை நீதிக்குட்படுத்த... ஆராதனைக் குழுக்களில் புதிதாகப் பங்கெடுக்கும் 5 குடும்பங்களும் தேவ அன்பில் ஸ்திரப்பட... கர்ப்பப் பை கட்டியினால் அறுவை சிகிச்சைக்குள்ளாகும் ஊழியர் நபீன் டார்ஜியின் மனைவி பிரசில்லா டார்ஜியின் நற்சுகத்திற்காக... நீச் காவ், சிமனா ஆகிய இடங்களில் விதைக்கப்பட்ட வசனங்கள் கிரியைசெய்ய ஜெபியுங்கள்.

## 16 அசாம் பணித்தளங்கள்: 55

கிறிஸ்து இயேசுவில் தங்கள் புதுவாழ்வை 7 பேர் அறிக்கையிட்டனர். லோபொங்டோலா தளத்தில் தேவாலயக் கட்டுமானப் பணி துவங்கியது. புதிய விசுவாசி சோகோல் சோரனின் இல்லக் கூடுகைகள் ராய்ப்பூர் கிராம ஜனங்களின் ஆத்துமத் தேவைகளைச் சந்திக்கிறது. பாவ்ரகுரியில் முதன்முறையாய்ச் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்த 16 பேர் இயேசுவை அறிவதில் ஆர்வமாயுள்ளனர், துதியுங்கள்.

போதையின் அடிமைத்தனம், வேலையின்மை ஆகியவற்றிலிருந்து ஆக்சிகுரி கிராம ஜனங்களைக் கர்த்தர் மீட்டெடுக்க... சோகர்பூரில் விசுவாசத்தினிமித்தம் இன்னல்களைச் சந்திக்கும் 5 குடும்பங்களுக்குத் தேவன் துணை நிற்க... டாகர்சுக் தள ஆலயக் கட்டுமான நிறைவுபணிகளுக்காக... டோல்குரி ஆராதனைக் குழுவுக்கு எதிராகச் செயல்படும் மோஜித் உள்ளத்தில் கர்த்தர் கிரியைசெய்ய ஜெபியுங்கள்.

## 17 மணிப்பூர் பணித்தளங்கள்: 67

சாமராம் தளத்தில் சன்னி என்பாரின் இல்லம் வேதபாட நிலையமானது. லாம்ஜாவ் கிராமத்தில் சுவிசேஷப் பணிக்கு எதிராய் நின்ற 5 குடும்பங்கள் தேவ அன்பை கண்டுகொண்டன. தேடுவோர் கூட்டங்கள் 105 இடங்களில் நிறைவடைந்தன; 525 பேருக்குச் சுவிசேஷம் கேட்கும் தருணம் கிடைத்தது. கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை 2 பேர் அறிக்கைசெய்தனர், ஸ்தோத்திரம்.

ஆராதனைக் குழுக்களில் புதிதாகப் பங்கெடுக்கும் 35 பேரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... வன்முறையினால் உடைமைகள், வீடுகளை இழந்துள்ள குடும்பங்கள், இடிக்கப்பட்ட 6 தள ஆலயங்கள் யாவும் மறுசீரமைக்கப்பட... சுவிசேஷத்திற்கு ஆர்வம் தெரிவிக்கும் வாங்பால், ஹெய்ராக் ஆகிய இடங்களின் ஜனங்கள் கர்த்தரின் வசனங்களில் வளர... டேக்சாம் மயாய் கிராம ஜனங்கள் நடுவில் பகைமை மறையவும், அன்பு, ஐக்கியம் மலரவும் ஜெபியுங்கள்.

## 18 திரிபுரா பணித்தளங்கள்: 102

குல்மராய்பாரா ஆராதனைக் குழுவில் 3 புதிய குடும்பங்களைக் கர்த்தர் இணைத்தார். பக்கவாதப் படுக்கையிலிருந்த பிஷ்ரீ லக்ஷ்மி ஜெபத்தினால் எழுந்து நடக்கிறார். பீர்சன்காமியில் தேவ வசனங்கள் சொல்வதற்குப் புதிய விசுவாசி பஜ்ராமணியைத் தேவன் பயன்படுத்துகிறார். 38 பேர் தளங்களில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டு, தேவனை மகிமைப்படுத்தினர், அல்லேலூயா.

புத்தாலயப் பிரதிஷ்டை ஆராதனைகள் நிறைவடைந்த 4 பணித்தளங்களிலும் சமுதாய மேம்பாட்டுப் பணிகள் துவங்கப்பட... மதுபானங்களுக்கு அடிமையாயுள்ள தொபய் கோப்ரா கிராம இளைஞர்களின் இரட்சிப்புக்காக... உதய்ப்பூர் பணி மையத்தில் விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்த வகுப்புகளில் பங்கேற்கும் 46 பேருக்காக... துல்காய், நமன்ஜாய் ஆகிய கிராமங்களில் முதன் முறையாய் வசனங்கேட்டோர் உள்ளங்களில் தேவன் கிரியைசெய்ய ஜெபியுங்கள்.

### 19 ஒடிசா—கஞ்சம், கஜபதி மாவட்டங்கள் பணித்தளங்கள்: 58

கானாசாகர் பகுதி ஊழியங்களில் மனு கோமாங்கோ வீட்டார் தன்னார்வ உதவிபுரிகின்றனர். கிறிஸ்து இயேசுவை இரட்சகராக அறிக்கைசெய்த 14 பேர் தேபகிரி ஆராதனைக் குழுவில் இணைந்துள்ளனர். வாரியமாரா, சிந்துரபாடாவில் நிறைவடைந்த வேனிற்கால வகுப்புகளைத் தொடர்ந்து புதிய தொடர்புகளைத் தேவன் தந்துள்ளார். நற்செய்தி நிரல்களை விரும்பி வாசிக்கும் அபேடா கிராம ஜனங்கள் நடுவில் ஊழிய வாசல்கள் அநுகூலமாகத் திறந்துள்ளன, துதியுங்கள்.

பீரசாஹி தள ஜனங்களுக்குச் சுகாதாரக் குடிநீர் கிடைக்க... செங்கு கிராமத்தில் புற்றுநோயுடன் அவதியுறும் பார்வதி சாபர் சுகம்பெற... ராஜாபூரில் கட்டப்படும் ஆலயத்தின் நிறைவுபணிகள், பிரதிஷ்டை ஆராதனையின் ஆயத்தங்களுக்காக... தாயை இழந்த ஊழியர் சிபானியா புயானின் குடும்ப ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

### 20 ஒடிசா – ஹோ, சந்தாலி பிராந்தியம் பணித்தளங்கள்: 58

கோலாபேடா, கோபர்கட்டி ஆகிய இடங்களில் சுவிசேஷம் செல்லும் அநுகூல வாசலைத் தேவன் திறந்துள்ளார். புதிய ஆலயம் பெற்றுள்ள பைடாபாஜா பணித்தள விசுவாசிகள் சுவிசேஷப் பணியில் ஆர்வங்கொண்டுள்ளனர். நலபில்லாவில் தேவ பணிகளுக்கு எதிராய் எழும்பியவர்களைக் கர்த்தர் சந்தித்தார். 'கிறிஸ்து இயேசுவே இரட்சகர்' எனத் தங்கள் விசுவாசத்தை 15 பேர் அறிக்கையிட்டனர், துதியுங்கள்.

முழுநேரப் பணியில் இணைய முன்வந்துள்ள 45 இளைஞர்களுக்காக... 8 பணித் தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... ஸ்ரீசந்தன்பூர், நட்டியா ஆகிய இடங்களில் வசனங்கேட்டோர் உள்ளங்கள் புதிதாக... ஆராதனைக் குழுவில் புதிதாகப் பங்கேற்கும் 12 குடும்பங்களும் இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் ஸ்திரப்பட ஜெபியுங்கள்.

### 21 ஒடிசா – சம்பல்புரி பிராந்தியம் பணித்தளங்கள்: 30

பார்பாலி பகுதியில் 5 புதிய கிராமங்களில் ஊழியங்கள் துவங்கப்பட்டுள்ளன. சம்பல்புரி ஜனங்கள் மத்தியில் ஊழியம்செய்ய 20 இளைஞர்கள் முன்வந்துள்ளனர். பர்மன்பூரில் ஆலயம் கட்டுவதற்கு விசுவாசிகள் தங்கள் நிலத்தை ஆயத்தம் செய்துள்ளனர். பாவ அறிக்கை செய்த 8 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தைப் பிரகடனம் செய்தனர், துதியுங்கள்.

விசுவாசிகள் அதிகரிக்கும் துகுரா ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... உபத்திரவங்கள் ஊடாய்க் கடந்துசெல்லும் குட்பாடா கிராம விசுவாசிகளுக்குத் தேவன் துணைநிற்க... சலேடி, ரெங்கலி கேம்ப் தளச் சபைகளுக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் பொருத்தப்பட... சம்பல்புரி ஊழியர்கள் 5 பேருக்கு சைக்கிள்கள் தேவை, ஜெபியுங்கள்.

### 22 சத்தீஸ்கடு, சாம்பா பிராந்தியம் பணித்தளங்கள்: 51

சுவிசேஷம் கேட்ட ராகேஷ் மதுப்பழக்கத்திற்கு முற்றுப்புள்ளியிட்டார். மன நோயில் இருந்த இளைஞன் மோகன் ரத்ரே இயேசுவின் நாமத்தில் சுகம்பெற்றான். டங்புடாவில் நிறைவடைந்த குடுக் மேளாவைத் தொடர்ந்து புதிய தொடர்புகளைத் தேவன் தந்துவருகிறார். 23 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கையிட்டனர், அல்லேலூயா!

பிசாசின் பிடியிலுள்ள மாதவியின் விடுதலைக்காக... திலாய் தளத்தில் நிறைவடைந்த இளைஞர் முகாமின் பின்தொடர் பணிகளுக்காக... பாய்ஸ்மா கிராமத்தில் போதை வஸ்துக்களுக்கு அடிமையான குடும்பங்கள் நற்செய்தியினால் மீட்கப்பட... சோர்பத்தி, முத்பார் தளங்களில் ஆராதனைக் குழு துவங்கும் முயற்சிகளுக்காக ஜெபியுங்கள்.

### 23 சத்தீஸ்கடு – ராய்ப்பூர் பிராந்தியம் — பணித்தளங்கள்: 22

சுவிசேஷம் கேட்ட இளைஞன் தினேஷ் குடிப்பழக்கத்தை விட்டு மனந்திரும்பினான். சர்சிவாவில் நடத்தப்பட்ட திறந்தவெளிக் கூடுகை 90 ஆத்துமாக்களுக்கு நற்செய்தி கூறும் வாய்ப்பு தந்தது. பாவ அறிக்கைக்குப் பின் இயேசுவில் தங்கள் விசுவாசத்தை 5 பேர் அறிக்கைசெய்தனர். புதிய விசுவாசிகளான திலக், பிரமிளா மூலம் வீட்டாருக்கும் நற்செய்தி புதிய நம்பிக்கை அளித்துள்ளது, துதியுங்கள்.

விஜய் விஷ்வகர்மா போதைப் பழக்கத்தினின்று விடுதலையடைய... குல்லு ஆராதனைக் குழுவிற்கு ஆலயம் கட்டுவதற்கு ஏற்ற நிலம் வாங்கப்பட... 30 வயது மகனை இழந்துள்ள கோமல் சாஹு வீட்டாரின் ஆறுதலுக்காக... ராய்ப்பூர் பிராந்தியத்தில் இயங்கும் 81 வேதபாட வகுப்புகளும் ஆராதனைக் குழுக்களாய் மலர ஜெபியுங்கள்.

### 24 மத்தியப் பிரதேசம் — பணித்தளங்கள்: 54

பீனா பஸ்தி விசுவாசிகள் ஐக்கியத்தில் 3 புதிய குடும்பங்கள் இணைந்துள்ளன. அசுத்த ஆவியினின்று இயேசுவில் விடுதலைபெற்ற சந்தோஷ், சுவிசேஷத்திற்குச் சாட்சியாளனாய் மாறினார். தேவ ஊழியங்களுக்கு எதிர்நின்ற தினேஷ், இரட்சிப்பின் அனுபவம் பெற்று, ஊழியர்களுக்கு ஆதரவாய்த் திகழ்கிறார். 5 வருடங்களுக்குப் பின் ஜெபத்தினால் கர்ப்பத்தின் கனிபெற்ற நிதி வீட்டார் கிறிஸ்துவைப் பற்றும் அன்பில் வளருகின்றனர், துதியுங்கள்.

போதை வஸ்துக்களுக்கு அடிமையாயுள்ள கணேஷ் மனந்திரும்ப... ஆலி எனுமிடத்தில் வசனங்கேட்டோர் உள்ளங்களில் பரிசுத்தாவியானவர் கிரியைசெய்ய... தேவ ஜனங்களுக்கு விரோதமாய் எழும்பும் மோகனின் உள்ளத்தில் தேவ அன்பு ஊற்றப்பட... போபால் பணி மையத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட 20 இளைஞர்களை முழுநேரப் பணியில் சேர்க்கும் முயற்சிகளுக்காக ஜெபியுங்கள்.

### 25 குஜராத் – அகமதாபாத் பிராந்தியம் — பணித்தளங்கள்: 47

தாகோத் மாவட்டத் தளங்களிலிருந்து 12 இளைஞர்கள் முழுநேரப் பணிபுரிய முன்வந்துள்ளனர். காரிபெடி தளத்தின் இளைஞர் முகாமில் 150 வாலிபர்கள் பங்கேற்றனர். பீல் ஜனங்கள் நடுவில் திறக்கப்பட்ட 3 பணித்தளங்களில் கர்த்தர் தந்த சமாதானப் பாத்திரர்களுக்காக ஸ்தோத்திரம். கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை 3 பேர் அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

கார்வானி, சுகாஸ், வகேலா தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... 10 வருடங்களைக் கிறிஸ்துவுக்குள் நிறைவுசெய்துள்ள பீம்கோர தளச் சபையார் சுவிசேஷ அறிவிப்புப் பணியில் பங்கெடுக்க... சர்வே மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ள 30 கிராமங்களுக்குப் புதிய ஊழியர்கள் தேவை... சபர்காந்தா பணி மையத்தில் எதிர்ப்புகளைச் சந்திக்கும் ஊழியர்களுக்குத் தேவன் துணைநிற்க ஜெபியுங்கள்.

### 26 குஜராத் – சோங்காடு பிராந்தியம் — பணித்தளங்கள்: 143

மோஸ்கூட் கிராமத்தில் கர்த்தரின் சபை உருவானது. 23 பேர் தங்கள் புதிய விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர். தான்கேதார் கிராமத்தில் ராமன்பாய் வீட்டாரைச் சமாதானப் பாத்திரமாய்த் தேவன் தந்தார். பிசாசின்

பிடியிலிருந்த சிவபாய், இதிஷா பேன் ஆகிய குடும்பங்களுக்கு ஜெபத்தினால் சர்வாங்க விடுதலை கிட்டியது, துதியுங்கள்.

பக்கவாதப் படுக்கையிலுள்ள பாரேஷ்பாய், சஞ்சய்பாய்க்கு இயேசுவின் தொடுதல் தேவை. 6 பணித்தளங்களில் ஆலயங்கள் கட்டுவதற்கான நில ஆவணங்கள், கட்டட அனுமதி கிடைக்கப்பெற... சர்வே மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ள 36 கிராமங்களுக்கு ஊழியர்கள் அனுப்பப்பட... சிக்தா, தேவஜிபாலியா, ஹோலியாம்லி, வத்வா ஆகிய இடங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்க முயற்சிக்கும் ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.

## 27 மகாராஷ்டிரா — பணித்தளங்கள்: 87

வறட்சியான நிலங்களில் விசுவாசிகள் சிவதாஸ், பிரதிமாபாய் ஆகியோர் அமைத்த போர்வெல் நிறைவான தண்ணீரைத் தந்தது, துதியுங்கள். கானாபூர், கரட்கேத் ஆகிய தளங்களைச் சேர்ந்த 6 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர். சோனேகாவ் ஆராதனைக் குழுவில் புதிய ஆத்துமாக்களின் இணைதல் காண்கிறோம். உயர்கல்வி வாய்ப்பு பெற்ற இளைஞர்கள் மனோராம், சுருதி புயாரே மூலம் சுவிசேஷம் பரம்பிப் பலன் தருகிறது, ஸ்தோத்திரம்.

8 வருடங்களாகக் கை, கால்கள் செயலற்ற நிலையிலுள்ள மதுக்கர் இயேசுவின் தொடுதலைப் பெற... சிக்கல்பாடாவில் இடம்பெறவுள்ள விசுவாச அறிக்கை ஆராதனையின் ஆயத்தங்களுக்காக... நந்துர்பார், சந்திராபூர் ஆகிய ஜில்லாக்களில் தளம் திறப்பதற்காகத் தொடரும் ஆய்வுப் பணிகளுக்காக... புதிய விசுவாசியான அனுசியாபாய் தன் வீட்டாரின் நிமித்தம் எதிர்ப்புகளைச் சந்திக்கிறார், ஜெபியுங்கள்.

## 28 தெலுங்கானா – ஹனுமகொண்டா பிராந்தியம் — பணித்தளங்கள்: 29

இயேசு கிறிஸ்துவை அங்கீகரித்த 3 இளைஞர்கள் முழுநேரப் பணியில் இணைய முன்வந்துள்ளனர். நிர்மல் ஜில்லாவில் 5 புதிய கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. வசன வாஞ்சைகொண்ட சங்கர்கிரி தாண்டா, ஆஷாபள்ளி ஜனத்தாருக்கு வேதபாட வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. சாய் நகரில் சுவிசேஷ வேலைக்கானத் தடைகளைத் தேவன் நீக்கினார், ஸ்தோத்திரம்.

பக்கவாதம்கொண்ட ஊழியர் ஜி.சுதர்சன் மற்றும் மூளைக்கட்டியினால் அவதியுறும் ஊழியர் பாபுராவ் ஆகியோரின் சுகத்திற்காக... அடிலாபாத் மாவட்டப் பணித் தளங்களுக்கு 5 ஒலிபெருக்கிகளும், 2 இருசக்கர வாகனங்களும் தேவை... இச்சோடா, பூசுகுடம் ஆகிய இடங்களின் ஆத்மாதாய முகாம்கள் பலன் தர... விசுவாசிகள் எண்ணிக்கையில் உயரும் தாடிஹத்னூர், குட்டாகுடம் ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலம் வாங்கப்பட ஜெபியுங்கள்.

## 29 தெலுங்கானா – ஹைதராபாத் பிராந்தியம் — பணித்தளங்கள்: 47

நாராயன்பேட் பணிமையத்தில் 4 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். ஊழியங்களைத் துவங்கும்படி 5 புதிய கிராமங்கள் நாகர்கர்னூல் ஜில்லாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சென்னாம்பள்ளியில் தேவாலயக் கட்டுமானப் பணி துவங்கியது. புதிய விசுவாசி ராமாவத் தன் நிலத்தைத் தேவ ஊழியங்களுக்கென அர்ப்பணித்துள்ளார், துதியுங்கள்.

நர்சாய்பள்ளியில் துவங்கப்பட்டுள்ள வேதபாட வகுப்பில் மேலும் புதிய நபர்கள் இணைந்துகொள்ள... யாதாதிரி மாவட்டப் பணித்தளங்களுக்கு 100 தெலுங்கு வேதாகமங்கள் தேவை... ஊழியர் வெலுகனையாவின் தள ஊழியங்களுக்கு தடை உண்டாக்கும் நபர்களைத் தேவன் சந்திக்க... 3 பணி மையங்களில் நிறைவடைந்த சிறுவர் ஊழியங்களின் பின்தொடர் பணிகளுக்காக... ஜெபியுங்கள்.

## 30 ஆந்திரப் பிரதேசம் – வட மாவட்டங்கள் பணித்தளங்கள்: 389

கோதுலகும்மாடாவில் அலேக்யாவின் இல்லம் சுவிசேஷப் பணிக்காகத் திறக்கப்பட்டது. கிறிஸ்து இயேசுவில் புதுவாழ்வைப் பெற்ற 46 பேர் தங்கள் விசுவாசத்தைப் பிரகடனம் செய்தனர். இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு, தற்கொலைக்கு முயற்சித்த சீமோன் சுவிசேஷத்தினால் மறுவாழ்வு கண்டார். அப்பாராவ், கிருஷ்ணவேனி ஆகிய புதிய விசுவாசிகளின் சாட்சிகள் அநேகரை நீதிக்குட்படுத்துகிறது, துதியுங்கள்.

சர்வே மூலம் தெரிவுசெய்யப்பட்ட 14 இடங்களுக்குப் புதிய ஊழியர்கள் தேவை. விசுவாசிகள் எண்ணிக்கையில் உயரும் 13 பணித்தளங்களில் ஆலய நிலங்கள் வாங்கப்பட... இதய வியாதியினால் அறுவை சிகிச்சைக்கு ஆயத்தமாகும் ஊழியர் குஜ்ஜாலா சுரேஷின் நற்சுகத்திற்காக... தண்டுலக்ஷ்மிபுரம், தலவரம் தளச் சபையாரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபியுங்கள்.

## 31 கர்நாடகா பணித்தளங்கள்: 45

பாவ அறிக்கைசெய்த 5 பேர் இயேசுவில் தங்கள் விசுவாசத்தைப் பிரகடனம் செய்தனர். ரஜோலா தளத்தில் மதுபானங்களைவிட்டு மனந்திரும்பிய விஜயகுமார் மூலம் வீட்டாரும் சமாதானம் பெற்றுள்ளனர். பரசுராம் எனுமிடத்தில் தேவாலயக் கட்டுமானப் பணி துவங்கப்பட்டுள்ளது. தியாவனிகே, ஹனுமந்த்வாடி ஆகிய இடங்களில் வசனம்செல்லும் அநுகூல வாசலைத் தேவன் திறந்துள்ளார், துதியுங்கள்.

காட்டபர்த்தி கிராம ஊழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கௌரண்ணா குடும்பத்தாரின் இரட்சிப்புக்காக... விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கிப்போன சித்தண்ணா வீட்டாரைத் தேவன் தம் பக்கமாய்ச் சேர்க்க... ஹீரஹள்ளியில் ஆலயம் கட்டுவதற்கான கட்டட அனுமதி கிடைக்க... கோபனஹள்ளி, ஜோகிஹட்டி தள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபியுங்கள்.

# ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்



சென்னை - ராயப்பேட்டையில் நம் ஊழியப் பங்காளர் ஜான்சன் சாமுவேல் அவர்களது தாயாரும், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியையுமான **திருமதி எலிசபெத் கோயில்மணி** (வயது 72) அவர்கள் 04.05.2024 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள்.

திருச்சி வட்டார விஷ்வவாணி பணிகளில் ஆதி நாட்களிலிருந்து மிகுந்த ஊக்கமும் பேருதவியும் புரியும் Dr. G. ஸ்டீபன் வின்சென்ட் அவர்களது தகப்பனாரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான **திரு. G. குருமாணிக்கம்** (வயது 95) அவர்கள் 09.05.2024 அன்று தேவ ராஜ்யம் சேர்ந்தார்கள்.





நாகர்கோவில் - நேசமணி நகரை சேர்ந்த நம் ஊழியப் பங்காளரும், தேவ பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களுமான **திரு. D. ராஜ்குமார் ரஞ்சித் ராய்** (வயது 77) அவர்கள் 11.06.2024 அன்று கர்த்தரின் ராஜ்யத்திற்குள் பிரவேசித் தார்கள்.

**தங்களுக்கு அருமையானவர்களை இழந்துள்ள இக்குடும்பங்களை தேவனின் சகல ஆறுதலும் சமாதானமும் நிரப்ப ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.**

## நடப்புச் செய்திகள்:

1993முதல் 2023வரை உலகெங்கிலும் உள்ள சராசரி கடல் மட்டமானது ஆண்டுக்கு 3.4 +/- 0.3 மி.மீ அதிகரித்துள்ளது. உலகளவிலும் பிராந்திய அளவிலும் இதன் எதிர்காலப் போக்குகளை மதிப்பிடவும், கணிக்கவும் தகுந்த கண்காணிப்பு கருவிகள் அவசியம் என்றும், பெருங் கடல்கள் பல படுகைகளில் அதிக அமிலத் தன்மை கொண்டதாக மாறி வருகிறது.

1960முதல் 2023வரை கடலின் 2,000 மீட்டர் மேற்பகுதியில், ஒரு சதுர மீட்டருக்கு 0.32 +/- 0.03 வாட்ஸ் என்ற விகிதத்தில் வெப்பமடைந்தது; இன்னும் இந்த விகிதம் தொடர்ந்து அதிகரிக்கும் எனவும், கடந்த 20 ஆண்டுகளில் அதிவேக வெப்பமயமாதல் இடம்பெற்றது என்றும் தவிர்க்க முடியாத சுற்றுச் சூழலில் ஏற்படும் மாற்றங்களால் பல நீண்ட கால ஆபத்துகள் இருப்பதாகவும் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

சமுத்திரங்களைப் படைத்த சர்வ சிருஷ்டிகரே, சீதோஷ்ணங்களை இயல்பு நிலைக்குத் திருப்பி, ஆபத்துகளினின்று எங்களைத் தற்காத்தருளும்.

நியூ கலிடோனியா மற்றும் அருகாமை யிலான தீவுகளில் வளரும் மீசிப்டரிஸ் அப்லான்சியலேட்டா எனும் தாவர மரபணு மிகப்பெரியது என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதன் மரபணுவானது மிகப் பழமையான சாதனை படைத்த பாரிஸ் ஜபோனிகாவை விட 7% பெரியது; மேலும் மனித மரபணுவை விட 50 மடங்கு பெரியது என்கிறது மரபணு ஆய்வறிக்கை.

தேவனே, தமது படைப்புகள் மகா விஸ்தாரமானதும் அறிவுக்கெட்டாததுமானது, ஸ்தோத்திரம்!

உலகம் முழுவதும் வேலையின்மை விகிதம் 2024ல் 4.9%ஆக இருக்கும் என்று கூறி இருந்தது சர்வதேச தொழிலாளர் அமைப்பு. இது கடந்த ஆண்டைவிட சிறிய வீழ்ச்சி ஆயினும், முந்தைய கணிப்புகளைவிட ஒரு பெரிய மாற்றமே! இது 5.2% ஆக உயரும். இருப்பினும் விகிதங்கள் 2025 வரை 4.9% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கர்த்தாவே, ஏற்ற வேலைக்காகக் காத்திருக்கும் தம் பிள்ளைகளை ஏற்ற வேளையில் மகிழப்பண்ணும்.

## விஷ்வவாணி ஊழிய விபரங்கட்கு தொடர்புகொள்ளுங்கள்

**தென் தமிழகம்:**
திருநெல்வேலி & தென்காசி:
✆ 9442006618. 18-B, டேனியல் தாமஸ் தெரு, பாளையங்கோட்டை-2.
நாகர்கோவில்: ✆94443-43180
தூத்துக்குடி: ✆ 96777-96052

**மத்திப தமிழகம்:** 29A, பிலிப்ஸ் கார்டன், பெத்தானி நகர், விளாச்சேரி ரோடு, பசுமலை, மதுரை-625004. ✆ 98653-52272.
திண்டுக்கல்: ✆ 97884-27036
விருதுநகர்: ✆ 96598-03075.
திருச்சி: 26A, எட்டுப் பட்டறை காம்பவுண்டு, திரு.வி.க. நகர், புத்தூர், திருச்சி-620017
✆ 9488804685
தஞ்சாவூர்: ✆ 9443586692

**மேற்கு தமிழகம்:** கோயம்புத்தூர்:
45, அன்சாரி வீதி, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009 ✆9442006614.
சேலம்: ✆ 9789758300.

**வட தமிழகம்:**
சென்னை – கோடம்பாக்கம்:
15/8, முதல் தெரு, சுப்பராயன் நகர், கோடம்பாக்கம், சென்னை – 600024
✆ 96008-88375, 90031-42572
சென்னை-முகப்பேர்:
LIG 502, முகப்பேர் ஏரித் திட்டம் 8வது தெரு, முகப்பேர், சென்னை-600037. ✆ 9443004640.
சென்னை – வேளச்சேரி:
தேவா-சுசி இல்லம், 13/9, 7வது மெயின் ரோடு, தண்டீஸ்வரம் நகர், வேளச்சேரி, சென்னை-600042. ✆9003609874.
சென்னை – பெரும்பாக்கம்:
5/225-A வீரமா முனிவர் தெரு, பசும்பொன் நகர், பெரும்பாக்கம், சென்னை-600100. ✆9003609874.
விழுப்புரம் & பாண்டிச்சேரி:
✆9443997515.
வேலூர்: 6, முதல் தெரு, கம்பன் நகர், அலமேலுமங்காபுரம், வேலூர் - 632009. ✆9600138998

## உள்ளமும் இல்லமும் இயேசுவுக்கு!

இரு வருடங்கள் என் வாழ்வின் இருண்ட வருடங்களாகவே இருந்தது! எனக்கு கைலாகு கொடுத்து உதவ எப்போதும் இருவர் என் அருகில் அவசியப்பட்டனர். ஏனெனில் பக்கவாதம் என்னை முடமாக்கி படுக்கையில் வைத்திருந்தது.

மணிப்பூர் மாநிலம் – சேடாபூரில் அமர்ஜீத் எனும் ஊழியர் வருவதுண்டு; அவர் கரத்திலிருந்த வேதப் புத்தகத்திலிருந்து வேத வார்த்தைகளை தெருக்கள்தோறும் நின்று கூறுவதும் உண்டு! 22.02.2024 அன்று கொடிய வேதனையுடன் என் படுக்கையில் போராடிய வேளையில் அண்டை வீட்டு விசுவாசி மூலம் ஊழியரை வரவழைத்தோம். ஜெபித்து, எண்ணெய் பூசி, எனக்காய்க் கண்ணீருடன் நின்ற ஊழியரைக் கண்டு, என் இருதயமும் இளகியது; இயேசுவின் அன்பிற்கு அர்ப்பணித்தேன்.



மூன்று வார ஜெபங்களுக்குப் பின் கர்த்தர் என்னை கட்டிலைவிட்டு எழும்பச் செய்தார், உட்காரவும் செய்தார். கைலாகு இன்றி நடப்பதும் இயேசு என்னோடு இருப்பதால்தான்! எங்கள் இல்லம் சுவிசேஷ நிலையமாகவும், என்னைப் போன்று வாழ்வின் விடியலுக்காக ஏங்கும் ஜனங்களுக்கு இயேசுவின் நாமத்தில் மறுவாழ்வு வழங்கும் கேந்திரமாகவும் இயங்குகிறது. இயேசுவுக்கே மகிமை!

– இபோயாய்மா சிங், மணிப்பூர்

## இயேசு எங்கள் மீட்பர்

என் கணவரின் வயிற்று சம்பந்தமான வியாதி முற்றிய நிலையில் அடுக்கடுக்கான பெல வீனங்களும் அவரது சரீரத்தை தொற்றி, மரணத் திகிலில் ஆழ்த்தியது. இல்லத்தில் இருந்ததையெல்லாம் சிகிச்சைக்காக செலவு செய்து முடித்து விட்டோம்; மந்திர தந்திரங்களால் சுகம் திரும்பும் என்ற எங்கள் எதிர்பார்ப்புகளும் கைகொடுக்கவில்லை.

கவலையிலும், பெரும் கலக்கத்திலும் கிடந்த எங்களைத் தேடி நல்ல செய்தி ஒன்று வந்தது; வசாவா ஊழியர் ஜலம்சிங் என்பார் மூலம் நாங்கள் வசிக்கும் நவகாம் கிராமத்திற்குள் வந்தது.

“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமப்பவர்களே, என்னிடத்தில் வாருங்கள்” என்ற அழைப்பின் செய்தியை கேட்க கேட்க கிறிஸ்து இயேசுவுக்குள் இருதயம் பெலப்பட்டது; என் கணவர் காலூன்றி நிற்பதும் நடப்பதும், கர்த்தராலேயே ஆயிற்று. ஏற்ற வேளையில் எங்களைச் சந்தித்த ஊழியருக்கு நன்றி, தேவனுக்கு ஸ்தோத்திரம்.

– மைலி பேன், குஜராத்



**உங்கள் அன்பின் ஈகையினை ஆன்லைனில் அனுப்புவதற்கான வங்கி விபரங்கள்**

Bank : State Bank of India
A/C No. : **1015 1750 252**
Branch : Amanjikarai, Chennai - India.

A/C Name: VISHWA VANI
IFS Code : **SBIN0003273**

UPI ID
vvadmin@sbi
UPI Name:
VISHWAVANI

இரசீது அனுப்புவதற்கு ஏதுவாக தங்கள் முகவரியைத் தயவாய்த் தெரிவியுங்கள்.
✆ 9443127741, 9940332294

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. HQ/SD/182/2024-2026 - TAMIL | DATE OF PUBLICATION 20.6.2024
LICENSED TO POST WITHOUT PREPAYMENT - PMG/TS/HQR/SC-02/WPP/2024-2026
Return Requested: VISHWAVANI SAMARPAN, 1-10-28/247, Anandapuram, ECIL Post, Hyderabad-500062.

இயேசு இராஜாவை இரட்சகராக அறிவிப்போர், அங்கீகரிப்போருக்குப் பரலோக தேவன் அருளும் ஈவு
ஆராதனை, ஆலயம், ஐக்கியம், வல்லமையான ஊழியம் என்பதாகும். எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் விடிந்தது. ஸ்தோத்திரம்!




SOURA PAILEM, ODISHA - 12.05.24



BAIDABAJA, ODISHA - 19.05.24



PEDAGUDA, ODISHA - 18.05.24



BALLERUGUDA, A.P. - 26.05.24



VENKAYALAGEDDA, A.P. - 19.05.24



SULEZARI, MAHARASHTRA - 08.06.2024



MURCHUKONA, A.P. - 19.05.24



PAKKABU, A.P. - 09.06.2024

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE
Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society ( Regn. No.17871 of 1987) and printed at CAXTON Offset Pvt. Ltd., 11-5-416/3, Red Hills, HYD-04. and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62. POSTING DATE: 23.06.2024. EDITOR: P. SELVARAJ.